752

உ

சாரதாம்பாள் துணை

திரிசிராபலே யாதவபுரம்

ம. வடிவேல்சாமி பிள்ளை

அவர்களாலியற்றிய

நூதன

# கீர்த்தன இரத்னகாம்

இஃது,

மதுரை வடக்குமாசிவீதி

M. சாமிநாத பிள்ளை,

அவர்களாற் றமது

ஷண்முக விலாச யச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கலானது.

விலை 1917 அணா-3

Registered Copy Right

... 29 NOV 1917 ... MADRAS

O26:4?
N17
123406

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான புஸ்தகவியாபாரிகளுக்கும், அச்சுக்கூடத்தலைவர்களுக்கும், தெரிவிப்பதுயாதெனில்;— திருச்சிராமலை ம. வடிவேல்சாமி இயற்றிய "கீர்த்தனாரத்நாகரம்" என்று தலைப்பெயரிட்டுள்ள இப்புஸ்தகத்தை மதுரை வடக்குமாசிவீதி ஷண்முகவிலாச வச்சுக்கூடத்தலைவர் மகா-ா-ா-ஸ்ரீ சாமிநாதபிள்ளை அவர்களுக்கு கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர்செய்துக்கொள்ளும்படி நாமே மனப்பூர்வமாய்க் கொடுத்துவிட்டபடியால் இப்புத்தகத்திலடங்கிய ஒருவரியையேனும் யாவராயினும் அச்சிடத்துணிவார்களேயாயின் அதனால் ஷையாருக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு உத்தரவாதி யாவார்களென்று கண்டிப்பாய் தெரிவிக்கலாயிற்று.

இங்ஙனம்

☞ ம. வடிவேல்சாமிபிள்ளை.

உ

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

# கீர்த்தன இரத்தினாகரம்.

## வினாயகர் காப்பு.

வெண்பா.

வாரிதியேழ் பொன்னுலகம் வையநதி யும்மமைத்த
சீரிதய ஞானபர தேசிகன்சேய்—நாரிதெய்வ
யானைவள்ளி சேருறுதோ ளானை தமிழ் பாடிதொழ
யானைமுகன் றாளிணைப்போ மியாம்.

அறு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வேதமது நாலொரமைந் தெனச்சகல புவனமெலா மேன்மை யோங்க
வேதவியா சன்மொழிய மாமேரு தனிலெழுதும் வெண்கோட் டானை
நாதவொளி வேதாந்த வீட்டானை மூலமறை நாட்டி ஞானக்
காதலொடு மன்பருக்கு மளியருள்செய் பெரியானைக் கருத்துள் வைப்பாம்.

(நாதாகிருபை செய்குவாய் யென்ற மெட்டு.)

இராகம் காபி—ஆதிதாளம்.

பல்லவி.

தேவா கணபதி தேவா கிருபைபுரி
தேவா கணபதி தேவா (தே)

அநுபல்லவி.

வா வா வடியன்காண ஓவா மூஷிக மேறும் (தே)

சரணங்கள்.

நீவா முனிவர்முத லாவார் தொழுமரிய
தேவா மெய்தாராயோ வாவா துயர்தீராயோ
மத்தகஜ மொத்தமுக கர்த்தனேநின் சித்தம்வையும் (தே)

பொல்லாக் கயமுகத்த னில்லா துயிர்முடித்த
வல்லா யொருகொம்போனே எல்லாமுன்செயல்தானே
எண்ணினனே அண்ணலேயென் இன்னலறப்பொன்னடிதா (தே)

மெய்யன் றனைவலமும் பையப் புரிந்துகனி
கையில் வாங்கிய சீலா ஐயா பார்வதி பாலா
ஆளெனையாள் பாலன்வடி வேலன்கவி மாலைபெறுந் (தே

---

(திருவுற்றி லகுகங்க வரை யென்ற காவடிச்சிந்து சந்தம்.)

தருநற் பதியின்வெள்ளைக் கரியுற்றரசுசெய்யுஞ்
சரசக் குலமகிப னிந்திரன் துயர்
பிரியக் கருணைசெய்த சுந்தரன் தேவ
தாருபூவனம் நீரிலாமலே சோரலானதை மீளவேயிலை
தழையச் செயல்புரிந்த நாதனை அருள்
மழையொத் துருசிவந்த பாதனை.

விரைவுற் றுருகாந்து நிறையக்கலையுணர்ந்த
மலயக் கிரிமுனிவன் கும்பநீர் வானம்
உலகிற் பெருவள நிரம்ப நேர் வகி
வேகமாய்சிறு காகரூபமா யாகிதாழ்த்திட போக காவிரி
விளையத் திருவுளஞ்செய் சீலனை மேரு
மலைநற் குமரி பெற்ற பாலனை.

கொடியக் கடற்படைகள் மடியக் கயமுகனை நொடியிற்
கொலைபுரிந்த வீரனை ஓர்கொம்
பொடித்துக் கரந்தரித்த தீரனை தேவர்
கோரும்வாறதாய் மேருமாமலை மீது பாரத மோத தீட்டிய
குமரக் கஜமுகசிங் காரனை பல்
அமரக் குழாம்பணியு தாரனை

மனதிற் றுதியடியர் தனனற் பொருளடைந்து
வளரக் கனியளிக்கு மெய்யனை ஒளி
கிளரப் ப்ரணவமூலத் தையனை வெற்றி
வாகை சேகர ஆகுவாகன மீதிலேறிய பூததேகனை
மருவிப்புணர்வல்லபை பாகனை சத்தி
மகிழப்பிறந்த நல் [illegible]னை.

கிரியுட் பொலியும்பரங் கிரியுற்றமர் குகன்மேல்
இளரத் தமிழ்ப்பதங்கள்பாடவே பூமுத்
தலரத் தனிசுரர் கொண்டாடவே நூல்நற்
கேள்வியாய்ந்தவர் சிலவாரியர் தாளைதாழ்வடி வேணுசாமி சங்
கீதத்திசை கஜத்தைவாழ்த்துவாம் மலர்ப்
பாதங்களை மனத்திலேத்து வாம்.

---

## தெட்சண கைலாசமெனச் சிறப்புற்றோங்கிய திரிசிரகிரி மாதபூதோசுரர் துதி.

### விருத்தம்.

சாரமா முனியுஞ் சொன்ன சாபத்தினாலே முன்ன
கோரமாய் நீரைநீத்துக் குறைவுறப் பெய்து மண்ணால்
தீரமாக் கோழிமன்னன் செம்பனூர் மூடுஞ்செம்மால்
நாரிமா சுகந்தகுந்த ளாம்பிகை நாதாபோற்றி

(தையலே சையோகம்—என்ற மெட்டு.)

இராகம் தோடி—ஆதிதாளம்.

### பல்லவி.

எந்த விதமேனுமுந்தன் திருப்பாத மீயவேண்டுஞ் சாமியே-அருள்
தாயுமான சுவாமியே வரமீயவேண்டும் சாமியே (எந்)

### அநுபல்லவி.

உந்து கனஞ்சேர் சிறந்த நன்கால் வீச
ஓடி தென்னடி பண்பாடி யின்பேப் பேச
ஓர் கலையா கூடிநே சசி
முடிலையா தேடினேன் (எந்)

### சரணங்கள்.

முந்திநற் றாய் போலும் வந்தோ யெனையாளும்
மோகம்மண் ணுகநின் ஏகவை போகமே
முழுதெற் கருள் நாவிலே உன்னே
தொழுதும் வீண் போகாமலே (எந்)

தண்டேன் புனல்மேயும் வண்டுங் குளிர்காயும்
தானுய்ப்பண் ணேபாடும் சோணுடுந் தான்மேவுந்
தவரிஷிதாழ் வாசனே சிவ
சிவ ஓம்நமோ பீசனே. (எந்த)

வித்தகநின் பாதம் விட வேறுமில்லாது
மெய்ப்பட நற்புகழிக்போது செப்பினேன்
வேண்டும் வடிவேல்சாமிக் கருள்
ஆண்டுவீர் ஞானசுவாமி (எந்த)

---

## மடக்குக்கலி விருத்தம்.

கரும்புருவச் சிலைநாரிக் கரும்புருவச்சிலைநாரி
தரும்பருவப் பொறியாருந் தரும் பருவப்பொறியாரும்
விம்புகரக் கணைமாய விரும்புகரக்கண மாய
பெரும்புகழ மானுடையோய் பெரும்புகழ் மாவிடையோய்

## இரட்டை ஆசிரியவிருத்தம்.

தெக்கணத்திசைநாடி வந்தவன் குமரைத் தேசிகன் பிர்மபுத்ரன்
இஜகமெலாஞ் சரஸ்வதித் தாயருள்மேலாக தித்திக்க செந்தமிழையும்
மிக்ககலையாதியும் கிரந்தங்களியாவையும் வெட்டவெளிசெய்த முனிவன்
மிகபுக ழுடைந்தவ னகத்தியன் காணவே விழாமணக் காட்சிதந்தாய்
சக்கரக் குலிசிவெள் ளானைதுயர் தீர்த்தவா சாரமா முனியையாண்ட
சம்புவே சங்கரா மாதபூ தேஸ்வரா சாமியா னேழையாளாய்
சக்ரா யுதன்நாண வேமறைத் திட்டகால் தரணிபட வேநடந்து
தண்கா விரிப்பொன்னி நாட்டில் வந்திக்கர்க தாயுமான சுவாமியே.

---

(நான் சொன்னபடி கேளாய் என்ற வர்ணமெட்டு.)

இராகம் தேசிக தோடி — ஆதிதாளம்.

பல்லவி.

வாசிராமலை லிங்கேசா வுல்லாசா யீசா இனம்
காமதமேனே யருள்ச பேசா வாசா (வாசி)

MADRAS

அநுபல்லவி.

பூமழையுந்துளங்கப் புண்ணியமே விளங்க
மாமலையிலேயருள் மாதபூதேஸ்பரசி (வாசி)

சரணங்கள்.

எந்தனுக் கிரங்கு பொற் சோதிலிங்கா
சிந்தனே செய் தேனேயனுதி துங்கா
ஓங்குநல் தும்பி கையில்
மாங்கனி யீந்த மெய்யா
ஏது சீமானே சோதனை தானே போதுமே கோனே (வாசி)

மகத்துவ சாரமுனியை வந்தாளத் தானே
மிருத்துமழை யுருத்தாய் நல் வேதத்தோனே
மாவிடையிலிருந்து தேவிபாகராய் வந்து
வர்க்கபரம்பரையா நிற்கடியும் பணிவோ
மெற்கருளும்புரிவாய் (வாசி)

சுக மருள்வாய் தினமும் சுயேட்சை கொண்டு
பகவனே தீவினேயி லடியேனின்று
சோராதெனேயளிப்பீர் நூறுயிரம் கும்பிடு
தூர்த்தனேயா டபடி யோர்க்கருள்நாத வடி
வேற்கவி சேருனடி (வாசி)

---

## சகலகலா வலாம்பிகா துதி.

வெண்பா.

பொன்னுலவு வெள்ளைநிறப் பூந்தா மரையமுகி
தன்னிருபா தங்கருத்திற் முனிருத்தி—யுன்னுடைய
பந்தமெலாம் நீக்கிப்பரவிப் பணிந்திறைஞ்சி
எந்த நாளும் வாழ்நெஞ்சே.

ஏதுந் தெரியா விளமை வயதிலெனே
யோதவைத்த தாயே யுனதடியே—மேதினியில்
நித்தநித்த மெய்யன்பாய் நெஞ்சம் பரவுமென்மேல்
சித்தம் வைத்து வாணியருள் செய்.

## கட்டளைக்கலித்துறை.

பங்கே ருகத்தி னூடேயெழுந் துற்ற பகவதியின்
செங்கேழ் நிறத்த திருப்பாதம் போற்றத் தினந்தினமும்
அங்கே யவர்க்குப் பொழியுமா வெள்ளம் அருட்கவிகள்
எங்கே நினைத்திடினும் வருஞ்செய்கை யியல்பிதுவே.

(கமல நயன என்ற சந்தம்)

இராகம் கல்யாணி—தஆதிதாளம்.

### பல்லவி.

பதுமவதன் மலர்மகளே உன்
பதமேயடிவன் தினமும் நினைவன் (பதும)

### அநுபல்லவி.

இதுகல் சமய மருள் செய்வாயே
இனிதுணையெனக் கார்சொல் வாயே
இறைவியேயென தருமைத் தாயே
ஏகமு மனையபுகழ்ந்தே
சேகர வானுனுவந்தே
தேகமு மீளவடைந்தே
தெரிவுயிர் பெறவருள் புரிதிருப் (பதும)

வெட்டினவொருமரமுந் தழைய
வெண்ணெய் தயிர்பால்நதியும் வழிய
வெறும்பனைத்துண்டமுமுன் கனிய
வேதலையுடனுற வோடி
மாதரை தனினுயிர் கூடி
போதரபுரிநினை தேடி
புகழுற நினையடி யனும் பணி (பதும)

ஏன் மகன்சொல்கேள் நீ மேவி
ஏத மேதிலாத தேவி
இன்பமே யெற்கருள் அன்பத்தால் கூவி
யேநினைபவனெனதாவி

தானுப வழியை யுசாவி
ஞானியே யருள்புரி தாவி
நடமாதவி வடிவேல்துதி. (பதும)

## எண்சீரடியாசிரிய விருத்தம்.

புண்டரிக மலர்ப் பதத்துப் புண்யஞானி
பொறை மருவுந் திருவதனப் போதவாணி
அண்டருமெய்ப் புத்தேளிர் புகழும் வேணி
யடிமை யெந்தனுவிலிருந் தகலாதே நீ
பண்டுகவிக் கம்பனுக்குச் சிலம்பை யீந்து
பாரதுயர் நீக்கிவைத்த பதும மேனித்
தண்டமிழ்த் தெய் வம்புலவர் சாற்றுந்தாயே
சரஸ்வதியே யம்பிகை யேயருள் செய்வாயே.

(சித்தம் சுத்தமதடைய என்ற சந்தம்.)

வித்தைக்குறுமனா வாணி புத்திக்கிசை வுறுஞானி
சித்தத்திருபதவேணி திகழ தமிழ்தா நீ
மேலாஞ் சிவமறை காரணியே அருள்
வெள்ளை மலரி லுறுநாரி
தொல்லைமிகு துன்பமுமாறி
விதலத்து மதலத்து
மிதமது சததள பதயுக (வித்தைக்)

உத்தம குணமுளதாயே சத்தியகலை சொலு நீயே
நித்தமு மருள் தருவாயே நிசமிது வருவாயே
சித்தம் நீ வைத்தரு ளித்ததி வித்தக
தேமொழியே கொண்டாட
பாமகளே யான் பாட
சித்தியிலே சத்தியளே
சேய்வடி வேல்கவி யுந்தரி (வித்தைக்)

## நடனசபேசர் துதி.

### இரட்டை ஆசிரியவிருத்தம்.

பஞ்ச பூதஸ்தலத் தொன் றுமண் காஞ்சியாம் பகர்காிக்கா தண்ணிராம்
பைக்கனல் சொரூபமா மண்ணுமலையினம் பவனனக்காளத்தியாம்
மிஞ்சாது நான்கையு மடக்கி யுண்டாக்கியோர் வெட்டவெளியாகி நின்ற
வேதங்களும் புகழுமாகாசமே யிந்த மேதினியிற் கைலாசமாம்
தஞ்சமென்றோரை யாட்கொள்ளு மட்க்ஷேத்திரம் ஜாதிபேதந் தவிர்ந்து
தந்தானமே யந்த நந்தனுக்கீய்ந்தவோர் தலம் சிதம்பரந்தன்னிலே
பஞ்சாட்சரி நாண நடனமாடிய தேவபாண்டியற்காக பின்னும்
பழமதுரை தன்னிலோர் கால்மாறி யேயாடும் பரமேசுரக் கடவுளே.

(மாறியாடியவா என்ற சந்தம்.)

இராகம் தேசிகதோடி—ரூபகதாளம்.

பல்லவி.

நடனமாடியவா வாவர்
நடனமாடியவா.

நங்கை செங்கணங் கயற்க ணம்பிகை பொன்
னம்பலத்தில் (நடன)

அநுபல்லவி.

கடல்மு னீந்த கடுகவக் குடித்தவா
கன்னல் வேளைக் கனலாய் மடித்தவர்
உடலோர் பாதி யுமைக்குக் கொடுத்தவா
உதித்தரைப் புலியதும் பணவே
ததித்திதித் திதித்தோ மெனவே (நடன)

மாணிக்கத் தோடு வளையல் சுமந்தவா
மாமனுகப் பாண்டி மனமு னமர்ந்தவா
மானகுரு துரோகி யானவனைக் கொல்ல
வாளாயுதமே கொண்டவா
நீலகண்ட னேயாண்டவா (நடன)

திருமகள் நாயக னேக
ஒருபாத முயலகன் ருங்க (நடன)

நந்தி தேவர் மத்தாள மடித்திட
நாரதன் வீணையிசை யாழ்படித்திட
பிந்தியுடுக்கும் பிறவும் பிடித்திடப்
பெருநட மாடிய தேவா
யினி வடிவேல்முனே வாவா (நடன)

---

## வடிவேல் முருகன் துதி.

### எழுசீர் சந்த விருத்தம்.

தனனு தனத்த தனனு தனத்த தனனு தனத்த தனனு.

நனிமாதவர்க்கி ருடியோ வியர்க்கு நலியாவரத்தை மிகவாய்
இனிதாயளிக்குமமரா தமிழ்க்கு மிறைகிரனுக்கு சிலவாய்
தனியாய் விரித்து தமிழோதி வைத்ததகையா யுளத்துனடியே
நினைவேன் மிகுத்து குமரா வெனக்குனிரு கால்ளிப்பீர் குருவே.

தனதான தான தனதான தத்த தனதான தான தனனு.

இனியேது தாழ்வுமில மாதுபெற்ற விறையே நின்பாத மலரை
நனியோதி யோதிமிகவாகநத்த நமனுதி தானுமிலையாய்
முனிவோர்களாதி மறையாதுரைத்த மொழியாக யானுமெளியேன்
நினைவேனை ஐயகுமரா வுளத்து நினையாத தேது குருவே.

---

(திருமால் சகோதரி என்ற சந்தம்.)

இராகம் இந்துஸ்தான் கவாப்—காப்பு தாளம்

பல்லவி.

வடிவேல் தயாபரா வாவாகடாட்சரா
அடியேனினுதரா யானை சகோதரா (வடி)

அநுபல்லவி.

கொடியவர் தானோர் விடுபடை தானோர்
நொடியினில் வானோர் மாபுரமே
கூச்ச லேயிடவி லோச்சி வேலிடுநின்
காட்சியே யருள்செய் வாய்பரமே (வடி.)
நடமிடுமயிலே விடுகுரு வயிலே
தொடுபவ செயலே தினிப்பரனே
நாதனோடுபிர மாதவாதில்பிரமாதனேட்டில்குட்டியவரனே (வ)
மலைதிரி குருவேயுளமிசை வரவே கலைவளர்தருவேவா குகனே
மாற்றி யெந்தன்வினை காற்றில் பஞ்செனவும்
ஓட்டிவந் தருள்செய் ஷண்முகனே (வடி)
மனமிக நொந்தே யுனதடி வந்தே
தினமும் பணிந்தே னேயருகா
வாமிதருஞ் சுத நாமனே வடிவேல் சாமிதுதிக்கருளே முருகா-(வ)

---

## ஆசிரிய வண்ணவிருத்தம்.

சந்தக் குழிப்பு.

தத்தத்த தானதான தத்தத்த தானதான தத்தத்த தானதான தனதானா.

சத்திக்கு மாரசீல வித்தைக்கு ஞானசாக
ரத்துத் திருகராமெய்ச் சிவஞ்ரே
சத்தித்த வாதியாக மத்துப்ர காசமான
தத்வத்து ஞானமூல மொழியாலே
அத்தத்தி னலபார முற்றப்புலோகமாதி
யற்பட்ட போது வாயிலிடுமால்நே
யப்புத்ர னவேதன் சித்தப் பிர்மையுமேவி
டக்கொட்டு வேதநாத கதிரேசா
மெத்தக்கி லேசமோடு பித்தப்பே யோடுமோடு
சித்தத்தி னலியானு மெலியாதே
விற்பட்ட வாளிபோன்மி னுக்கிட்ட பார்வைநாரி
கட்பட்டு மோகமீறி யழியாதே

நித்தக்கிர் பா தயாள முத்துக்குமார போல
விச்சித்ரமான நீல மயிலோடே
நிற்கக்கை வேலினோடு மெற்குக்கண் காண
வாரும் நித்யச்சு காருகாவா முருகோனே.

---

(அவதாரபுருஷன் என்ற சந்தத்தில் பின்மகுடம்.)
இராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி.

வடிவேல் முருகன் மால்மருகன் நாலிருகண்
வானவன் பணிவிரகன் (வடிவேல்)
மந்த்ர கந்த விந்த்ர சொந்த
வன்பி லின்பொ டுங்கலந்த (வடிவேல்)

அநுபல்லவி.

சதுர் மறையவனைமுன் சிறைசெயும் ப்ரணவ
விசாகன் சரஹண பவயோகன் (வடிவேல்)
வன்பரம்பொரு ளுறையுந் தென்பரங்கிரியமர்ந்த(வடி)
மத்தகக் கயத்துபின்பு தித்த சத்த வக்கரத்த
வுத்தம குணத்த முத்த பச்சை கிசியாசனத்த (வடி)
வாட்டடங்கண் பார்வதிப் பெண்
காட்டிகை கொடுத் ததன் பின்
கூட்டுறக்கிர வுஞ்சமீதும்
நீட்டிய சொடிய வேக (வடிவேல்)
வாசவ னுதியர் பேசவே நாடிச
பேசனுங் காணமு னேசில வோதிய (வடி)
மகிதல மொருவல மெனநல குலகிரி
சிகிமிசை வருகுரு சரஹணபவசிவ (வடி)
மச்சக் கொடியவ னிச்சித்திடு தமிழ்
மிச்சப் புகழ்பெறும் பட்சக்கடவுளர் (வடி)
மனந்துதி யுறபுகழ் தினம் வடிவேல் சாமி
தனையுங் கடைக்கணருள் புரியுந்தயாபர (வடிவேல்)

வேலனே இந்த வீணனையேன் படைத்தாய் சந்தம்

இராகம் தேசிகதோடி—ரூபக தாளம்

பல்லவி.

தேவனே உந்தன் தீவிர வேல் எடுத்தாள் அந்தத்
திறமிஞ்சிய கிரவுஞ்ச மாமெனும் வஞ்சகமோடவேசெய (தீ)

அநுபல்லவி.

பாவ வினைக்கட லூடே புலனைந்து
பலமாநதி கிளையானது தலைமாறிட வோடவே செய (தீவிர)

சரணங்கள்.

பொய்ப்படு வேசைப் புலைமனந் திறந்து
செப்பிய தாமனச் சேற்றுழத் திருந்து
தப்பாக மந்தத் தடியோரைக் கலந்து
சலமாய் கையி லுளமாய்ந்திடு
பலமா வினை யோடவே செய (தீவிர)

துர்க்குண போதனை தூரமே லோங்குது
துர்ச்சனர் சிநேகத்தி லிச்சையுண்டாகுது
நிர்க்குண மோன நிலை பின்னால் வாங்குது
நெறியாம் பரங் கிரிவானவ
வருவாய் வினை யோடவேசெய (தீவிர)

பந்தமும் பாசமும் பற்றி வருந்திடும்
சிந்தையது வேறாய்ச் சென்று கலங்கிடும்
மைந்தனு னுந்தன் மலர்க்கால் வணங்கிடும்
வடிவேல்சாமி தீனையாதரி
கொடுமாவினை யோடவேசெய (தீவிர)

---

(மாமதுரை ராணி என்ற சந்தம்.)

இராகம் கல்யாணி—திரிபுடை தாளம்

பல்லவி.

வாமயிலிலேறி மனமகிழ்வொடு மருள்புரியென்னேரில் (வாம)

அநுபல்லவி.

மாமலையில் வாழும் மைந்தனே கந்தனே யெந்தனின்குரு-(வாம)

சரணங்கள்.

நேம வெற்பளி மாமகள் சிவ காமிபுத்திர
னே மயங்கிய காமவற்பனை யாளாஹர
அரஹரவயில் சரஹணபவ சிவகுரு வாமயி

பாமரரைக் கடையோர் தமையின்பாய் மனதிற்களிகூர் சிறி
தான் அறியேன் வடிவேற்கருளுன் [யேன்
சந்ததஞ் சிறந்த முத்தியுந்த ரத்திகழ
மந்திரங்கனிந்த நற்பரங் கிரிக்கந்தனே (வாமயி)

---

(மாத்தாட பாராதேனோ யென்ற சந்தம்.)

இராகம் கமாஸ்—ரூபகதாளம்

பல்லவி.

சாட்சிவேறென்ன சொல்லையா ஷண்முகமெய்யா மனச்
சாட்சிவேறென்னசொல்லையா

அநுபல்லவி.

ஆட்சேபனை தவிரும் அமராவேல் முருகையா (சாட்)

சரணங்கள்

காட்சி நின் பக்தருக்கே காட்டு மெய்யனே குகா
மாட்சி அடைய வேண்டி வாழ்த்தினேனே தேசிகா
மறையயன் மிக பணிதுரையே சிவ பரன்தனது நுதல்வரு
காரணமறை பூரணசுரர் தீரனேவரக் [மெய்யுறுதவ
கோரினேன் மனச் (சாட்)

ஐம்பொறியுங் கலங்கும் ஆசைவிடா திலங்கும்
ஆற்றலிலா திரங்கும் ஆகத்தெரிந் திருந்தும்
அது தெரியா திருப் பது சரியன்று நீ
அருள் புரியத்தகி வடி களின்நன்புகழ்
அந்தவேல் சாமி யுந் தமிழ் சொல
சுந்த்ர மாமயி லுந்தி வந்திட (சாட்சி)

(அலைசேர் கடல் சூழுலகில் என்ற சந்தம்.)

இராகம் இந்துஸ்தான் பியாக்—ஆதிதாளம்

பல்லவி

வருவாய் குமரா தினனின் னடிதாழ் பவனரு குருவே
வாகைமிகுத்துறு தோகை மயிற்பொருளேகதிதரவே -(வரு)

அநுபல்லவி.

விரைவாய் வருவாய் தருவாய் வெறுந்தொழும்பனுக் கதிவரமே
மிகபுகழ்பெறு குக சுக மருள்
விக சிதமயில் தகதகவென (வருவாய்)

சரணங்கள்.

திருமகள் கொழு நனும் பிரமனும்
விருநிதிமக பதி சசி யொடும்
திக்கென சிக்கி திகைத்துள முட்கிட
திடமிகுமலை யடலொருகையி
லடுநவசுர ருறவொடு திசை
திக்குக ளிடக்கடற் கடக்கவே யடக்கிய
சடாக்கர நொடிக்குளே நீ (வருவாய்)

சரஹணபவ சூரரைக்கொல்ல
திறமிகு சுரர் படையொடு செல்ல
நெறி வழியதில் பாரமுள்ள
கிரியெதிர்படத் தனிவயி லேவக்கள்ள
தீரனச் சூரைக் கிழித்துச்
சேரவெங் கொடி பிடித்து
மாரனென வுஞ் ஜோடித்து
தீரவரம் பிரசாதித்து (வருவாய்)

குருமணி திருவருள் புரியவா
சிறுவனின் மனதுறு மரியவா
கொங்கை கொடுத்திரு நங்கையணைத்திடு
தங்க நிறத்தவா! திருவறுமுகமதுமின
சிவன் தரு கனியதை பெற பசுமயில்

திட்டமாய் துண்டிபப நாதா
சட்டென வேல்சாமி நீதா
கிட்ட நீ யிருகூடாதா. (வரு)

---

(பொன்னுலவும் சென்னிகுளம் என்ற காவடிச்சிந்து சந்தம்)

பொற்சிகர முந்துளங்கும் நற்பரங்கிரி விளங்கும்
புண்ணியக் குமார சத்தி வேலனை மனம்
எண்ணியே பரை பயந்த பாலனை எப்
போது மேநினைந் தோது சிலருக்
கேதுதீவினை யாதி காரண
பூரண ஞானவரத சீலனை மாயா
காரண விநோதசூர காலனை.

கவ்வை யறச் செவ்வயிலைதெவ்வர்படை சாயவெய்த
கந்தன் சுகனுன சுந்த்ர ஷண்முகன் துதி
சிந்தனை யாளர்க்கருள் செயுங் குகன் றன்னை
காதலோடு தொ ழாத பேர்பல
பூதவாதனை யாலே நைவுறக்
காணுமே யவைகளற வேற்றியே வேத
ஞான தேசிகன் பதங்கள் போற்றியே.

சித்ர சிகியிற் பொலியும் உக்ரசத்திவேலவன் மெய்ச்
சித்தருக்கருள் சுரந்த பண்டிதன் ஞானம்
உத்தமர்க்களுக்களிப கண்டிதன் சிறைச்
சேவல் கேதன ஞன தேசிகன்
ஞானம் வேதனுக் கோதும் வாசகன்
சேவகன் றணைப்பதங்கள் கூடியே கெட்ட
சாவகன்ற மெய்யின்பத்தை நாடியே.

காணவென்று நானுமின்று நாதநன்றுன் பாததொண்டு
கார்த்திகேயனே புரிந்தேன் ஆளையா திரி
மூர்த்திகள் தேவர்பணியும் வேலையா சூர
கால நேமிச காயவாமி புத்

ராயனே நமோ வேலனே நமோ
காவையாபுரிக் கடவுளே நமோ உந்தன்
சேவைவடிவேற் கருள்செய் வாய்நமோ.

---

(கண்ணாயிரம் படைத்த என்ற காவடிச்சிந்து சந்தம்.)

அண்ணா பரங்கிரிவாழ் அண்ணா குமரகந்த
அதிகவனப்புடை கதிமிகு வேற்படை
ஐயனே உன
தடியவ ருக்குறு மிடரறச் செய்குரு மெய்யனே.

என்னால் நடப்பதிலை உன்னா லசைவதன்றி
இறையருள் சரவண பவகுரு மெய்யுப
தேசனே மிக
விரைவினி லென்னையாள் அரஹர சிவப்பிரகாசனே.

முன்னாள் தொடர்வினைகள் இன்னாளறும்படியாய்
முழுமறையுரைசொலும் பிரமனை சிறைசெயு
மூர்த்தியே அறு
முக நிதமுனைதொழு மெனைபினியளிமிகு கீர்த்தியே.

சிங்கா ரமுமிகுந்த வெங்கானகத்திடையோர்
சிறுமாரமாயுரு பெறுகுமராமலைச்
சித்தனே துதி
செயுமடி யேன்வினை பயமறவேபுரி முத்தனே.

கந்தா வடிவேல்துதி மந்தரா சடாட்சரமெய்க்
கருணைபாங்கிரி யுறுபவ சம்ஹார
காரணா திரு
கருமுகில் வண்ணனின் மருகனே மெய்ம்மறைப்பூரணா.

---

(மரகதச் சித்ர என்ற சந்தம்.)

இரங்கம் மால் கோஸ்— ஆதிதாளம்.

விகசித பத்ம வுலாசி மருகா
விமமகள் நித்யகுமார முருகா

விரிகட லொருவொடி தனில்லே-சுவறிட
வெரிவயிலேவி னேனே யருகா
விஞ்சை மிஞ்ச செஞ்ச டாத ரன்கு மாரா
வினயசுகுண குமரனே புக ழுமரனே நினைங்
தமரவே சுகமுறும் (விகசித)

பகரப் பதத்தே தேடி நின்றேன்
சிகரமுறுப்பா ஞடி நன்றோர்
பகவதி தருமொரு நெடுவயி லிடபுக
ழுறு பர குரு சிவ னேசவன்றோர்
பத்ர முற்ற உக்ர மத்தி
விற்ப னத்தி னுற்று மேலே
பழிப்பறவே கெலிப்புறு நே
சதத்துவனே மித்தவனே (விகசித)

குகபர மெய்த்திடு வேல்இடும்பா
சுகபுல வர்க்கொளி கூடு நண்பா
குவலய மதிலொரு புகழுறு திடமொடு
வடிவயி லிடுகுரு வா கடம்பா
குற்றமற்ற பக்தருக்கு
சற்று சித்தம் வைத்து நத்தி
கும்பிடுவெடிவேல்சாமி யின்பமுறவே புரி நீ
குங்கும மணிந்த மங்கையரிருந்த
வங்களில் மகிழ்ப ரங்கிரியமர்ந்த
கொங்கிற்றேய்வுறத்தழைத்த வங்தொடைக்கோ மிகுத்தருள்பொழி (விக)

---

(பழனியாண்டவனே சந்தம்.)

இராகம் தோடி—ரூபகதாளம்.

குமர னங் குகனே வினையுறு
குரைக்ட வினையற கரங்குவி
விரைவினி லென் தருமனங்கவி
கூர்ப்பல வேலவ வெற்கருள்
பாற்கட லேற்றுயிலான் மகிழ் (குமர)

அநுபல்லவி.

சமமுகில் விடும் புனற்பெருகிடத்
தண்டுறைக்கய லென்றும் வளர்ந்திடக்
கமுகிளஞ் சிறு வனந் தளைபடக்
கண்டக் குலை யதிர்ந்தெழு பொடி
மண்டக்கரை கதம்ப சந்தொடி
காமசேகரன் பயந்த ருமநாமனும் புகழ்ந்த
காலெனவாயுத மேவிய
சீலசுகேதன வோவிய
கங்கையுந் திங்களுந் தங்கிய
வங்கனு முந்துப ரங்கிரி (குமா)

சரணங்கள்

வேகமுடனே கொடுங்கிரி மீது
விரைவயில் விடு மாயூர சாது
கோபமே விளங்கிய பரை மாது
கோன் சிரித்திடப் பறந்து
வான் மதிக்குமே மேலுயர்ந்து
மேபற்குண வுலகதை னொடி
சாபாற்புத முறவலம் வரு
வென்றிச் சிங்கந்தாமரை
யென்றிச் சிக்கும் பூமரை
வேறிலாதபாத! சூரர் மீறிலாத நாத தீர
விதுவானன குருவேவடி வேல்சாமியாதரனே சிவக் (கு)

---

இராகப் பயிரவி—ரூபகதாளம்.

பல்லவி.

எப்படி நான் சகிப்பேன் இனி
ஏலாதையா சீலாவுமை பாலாகுரு வேலாயுதா (எப்)

அநுபல்லவி.

இப்படியாய்த் துயர் என்னை வருத்தினால்
எப்போது நீ சுகம் இன்பங் கொடுக்கும் நாள்
ஈசா மறை வாசாமயி லேசா கதி ரேசாதுயர் (எப்)

சரணங்கள்.

அப்பனீ யல்லையா அருள்வதா யில்லையா
அடியேனுன் பிள்ளையா யானதற் கேனையா
தப்பிதந் தானுண்டோ தார்புனையுந்திண்டோள்
சாமிசிவ காமிசுதா பூமிதனி லோயாத்துயர் (எப்)

மெய்மறைப் பொருள்வாசா வேலவா வள்ளி நேசா
விரி சிறைமயி லேசா விரைவில் வா பிரகாசா
கம்மினேன் குரல்கூவி கார்த்திட வாவா தாவி
காலாயுத மாகேதனு யாளாய்வடி வேலாதுயர் (எப்)

திருப்பரங்கிரி வேலா திருவடி நெடுநாளாய்
சிந்தையில் துதியாளாய்த் திகழடிமைக்கு சீலா
வரப்பிர சாதங் கொடு மாமயிலா கும்பிடும்
வடிவேல்கவி தொடையாயுன தடிமீதணி படைசேகர(எ)

---

## இரட்டை யாசிரிய விருத்தம்.

திருவுறையு மலர்நறவு பெருகிநதி யாய்நிறைய செந்நெல்வயல் பாயவதனிற்
றேரை தாராட்டநற் கமடமதுறங்கவரி சிறுகுர லெழுப்ப மஞ்ஞை
யொருபெரிய மாங்கமுகு சோலையில் நடஞ்செயும் உம்பராதிகள் புகழ்தரும்
உமையவளும் ஈசனும் பன்னிருகைவேலனும் உற்றரசு செய்தநாடு
கருமுகிலோ ரேழுமே சிறையிருந் திட்டதெழு கடலையுர் தனுள் கண்டது
கடம்பவன மேமிகுதி யாகிவளர் கூடலிற் கண்கண்ட தெய்வமாகி
சுருதிபொருள் சொற்றநற் கற்றறயஞ் சடைப்பரன் சொந்தக்குமார முருகா
துன்பந்தவிர்த் தருள்செய் தென்பரங் குன்றில்வளர் சுப்ரமண்யச் கடவுளே.
இன்னமு முனக்கென்ன சொல்லவே வேண்டுமோ என்றுயர்நீயறியாததோ
ஏழையடி மையுனது பாதார விந்தமே எனையா மறந்ததுண்டோ
நின்னையல் லாமல்மற் றெத்தெய்வ மும்மெனது நினைவிலுண்டோ வில்லையே
நீஸ்ரே ஞன்படுங் கஷ்டங்க ளைக்கண்டு நீக்கமுடியாதோ வுனல்
கன்னலின் ரசமொழிய ரிருவர்சூழ் கந்தநின் கடைக்கணரு ளுண்டாகுமேல்
கர்மவினை சென்செயும் தீப்பட்ட பஞ்சுபொதி காட்சியா யாகுமன்றோ

சொன்னகவி சரியென்ன கீரனைச் சபித்தவன் சொந்தக் குமாரமுருகா
துன்பந் தவிர்த்தருள்செய் தென்பரங் குன்றில்வளர் சுப்ரமண்யக்கடவுளே.

ஆறுமுகம் பனிரெண்டு கையழகு சொல்லவே யாதிசேடனு லாகுமோ
வாயிரம தோடுபல் லாயிரம் நாவிருந் தாலுமுடி யாதே யினி
யேறிமயி லஷ்டநா கங்களுந் திடுக்கிட விரத்தினத் தலைகள்குலைய
வீசன்கர மாங்கனிக் காகவல மாகவே யிவ்வுலகை வந்தஸ்வாமி
தேறுத லெடுத்துரைத் தென்னுளங் களிக்கவே செய்யவுன் பாதங்களைச்
சிறுவன்விபரங்கண்ட நாள்கள்தொட் டிதுவரையில் சிறிதாகிலுமறந்தேனே
சூரசம் ஹாரனே யாறுதலை கொண்டசிவன் சொந்தக் குமாரமுருகா
துன்பந் தவிர்த்தருள்செய் தென்பரங் குன்றில்வளர் சுப்ரமண்யக்கடவுளே.

---

(ஞான வேலனே பாலன்முகம்பாரையா வென்ற சந்தம்)

இராகம் தேசிகதோடி—ஆதிதாளம்.

பல்லவி.

கோபமேன் ஆபத்தினைக்காரையா நிறக்
கோலமாமயில் மேலேயேறிய
வேலவாகுகா ஆளுவாயினம் (கோப)

அநுபல்லவி.

பாபக்கடல் பாதாள பாழ்நரகில்வீழாமல்
பாது காக்கயிப் போது நேரிலுன்
பாத தாமரை தாவா வேலவா (கோப)

உலகை வலமாய்வந்தோய் ஓங்காரப் பொருளறிந்தோய்
ஊசி மாசுழி தேசி கற்குப
தேசி யானவா தாச னென்மீது (கோப)

சரவணப் பொய்கைதனில் தானே யவதரித்தோய்
சாமி வாகுரு சாமியே சிவ
காமி பாலனே பாமரன் மேலே (கோப)

ஷண்முக மெய்ப்பொருளே சடாட்சரத் துள்ளருளே
தாச னுக்கருள் தேசிகா குகா
பேசி னேன்உன தாசி கூறுவாய் (கோப)

செந்தமிழ் வேனுசாமி செய்வினை கார்த்தாளுவாய்
திருப் பரங்கிரி பொருப்பிலே யுறை
தரப் பறவையி லிருப்பவா குகா (கோப)

---

(சந்தா சலகுமரா—சந்தம்)

இராகம் பியாகடை—ஆதிதாளம்.

பல்லவி

அப்பா நீ ரருள் செய்வீர் வாதாயென் றுரை
சொல்லும் (அப்)

அநுபல்லவி

செப்பினேன் தினம்துதி சேர்ந்தேனும்பதங்கதி
இப்பவே ஒப்புநீ ஏழையும் ஆளானேனே (அப்)

சரணங்கள்.

நித்யனாய் நிர்மலனாய் நீற்றனருஞ் சுதனாய்
சத்யனானேனே கந்தா சமயமிதுவேயெந்தாய்
சாமிவா சாமிவா வாதாயென் றுரை (சொ)

என்னவா உன்னைத்தேவா
ஏற்றும்படிக் கருள்வா
சின்னமான் வள்ளி லோலா திருப்பரங்கிரி வேலா
தேசிகா தேசிகா வாதா யென் றுரை (சொ)

உன்னையே தினந்தோறும்
ஓதும் அடியனையாள்
மன்னவா வடிவேலன், வறுமையைத் தீராய்கந்தா
வாசிவா தேசிகா வாதா யென் றுரை (சொ)

---

(இன்னும் தயவு வில்லையா என்ற சந்தம்.)

இராகம் நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

பல்லவி.

என்றன் பிரியம் ஷண்முகா பதம்
என்றும் பணியவே குகா (என்றன்)

அநுபல்லவி.

என்று முன் இருபாதம் எண்ணினேன் விரகா
ஈசனுக்கும் உப தேசி மால் மருகா
தென்பரங் கிரிவளர் தேசிகா முருகா
தெய்வயானைவள்ளித் திருமகி ழருகா (என்)

சரணம்.

ஐயநின் னருளல்லால் அவனியில் ஏதும்
ஆகா தாதலால் அடிமையாகுதும்
மெய்யன் ஆனவா வேலா யென்மீதும்
விமலா யெண்ணுதே நீ வருத்தங்களேதும் (என்)

உள்ளநோய் வினையெலா முலகையு மாட்டும்
உன்னைக்கண்டவுட னேயவை யோட்டம்
அல்லவாகுகா ஆயனும் போற்றும்
ஆறுமுகா நானே யடிமை காப்பாற்றும் (என்)

மாங்கனிக்காய் மண்ணை வலம் வந்தநாதா
மாமலை வாழ்தேவா வரமிகத்தாதா
திங்கனுகாமலை செய்ஞான போதா
சிறுவன் வடிவேல்சாமி செப்பிடும் பாதா (என்)

---

(அம்பாள் மதுரை மீனாட்சி என்ற சந்தம்.)

இராகம் தேசிகம்—ஆதிதாளம்.

திருப் பரங்கிரிவாழ் வடிவேலா வெகு
பாவியென்னை யாளாய்த் தயாளா
பசையுமை பெறுபாலா
பன்னிரண்டு தோளா.

நான் ஏழை யென் மேலென்ன வாதா பிணி
யார் துணை மலர்ப்பாதா யென்னுதா
எனக் கருள் செய்யொணுதா
ஞானகுரு போதா.

| | | |
|---|---|---|
| முக்கண் | ஈசனுக்கும் உபதேசி | மலர் |
| | வாசனை மறைபேசி | கைவீசி |
| | சிறை செய்த சந்யாசி | |
| | கிருபை செயயோசி. | |
| அர | ஹர குரு மயிலி லேறி | வாவா |
| | அடியனுக்குபகாரி | பன்னிரு |
| | கையனே சினமாறி | |
| | கிருபைக்கண் பாரீர். | |
| சர | ஹணபவ சிவ குருவே | பஞ் |
| | சாட்சார மெய்யுருவே | நீவரவே |
| | அடியனற்கதி யுறவே | |
| | மெய்யருள் பெறவே. | |
| நான் | வேண்டினேனே முருகோனை | நீயும் |
| | வெறுத்தெனைத்தள் வானே | பூமானே |
| | விமலியின் புதல்வோனே | |
| | வரங்கொடு சீமானே. | |
| குற | வள்ளி மகிழும் வடிவேலா | தெய்வ |
| | யானை மகிழ் மணாளா | சுசீலா |
| | வரங்கொடுத் தெனையாளாய் | |
| | திரிபுரையின் பாலா. | |
| மாலை | யக்கடப்பந் தாராய் | வடி |
| | வேல் துதி சிங்காரா | ஒய்யாரா |
| | மாமயி லேறும் வீரா | |
| | சூர சம்ஹாரா. | |

---

## இரட்டை ஆசிரிய விருத்தம்.

முத்துக் குமாரனே மோகன கெம்பீரனே முகமாறு கொண்ட தீரா
மோகமட வள்ளிமகிழ் கொழுநனே சூராதி மூர்க்கரைக் கொன்ற வீரா
சத்யமறை தந்தபிர் மாவை முன்னே சிறைச் சாலையிலடைத்த நீதா
தந்தைக்கு முபதேசந் தந்தவா கந்தநா தாவிந்திரன் றன் மருகா

எத்தனை தாரமியான் முறையிட்டுமே உனக்கேன் இரங்காதோ வுளம்
இனிவேறு துணையேது சினமேது தள்ளீ நீ யிட்சணம் அருள்செய்குவாய்
தத்திப் பொறிப்பணிகள் சுற்றித்த ரித்தசிவன் சொந்தக்குமார முருகா
துன்பந் தவிர்த் தருள்செய் தென்பரங் குன்றில்வளர் சுப்ரமண்யக்கடவுளே

எதுசெய்தே னிற்கு யானறிய வில்லையே யேழையென் மீதிலே நீ
யேதுசெய்வது சூது கூடாது புவியின்மீ தித்தனை நாள் இருந்தும்
ஆதிகுரு வுன்னடிகள் காணாத தோஷமே யடியனுக் கான துயராம்
ஆகையாலே பெரிய தோகைமயி லேறியெற் கருள்புரிய வெதிரில் வருவாய்
சூதுபுரியாதே நான் சிறுபிள்ளை யென்னைநீ சோதித்தல் கூடாதையா
சுகஜீவ வாழ்க்கையின் செல்வங்கொடுத்தருள் துப்பனே மெய்யனேயச்
சோதிபார்வதிமாது பாதியுடலான பரன் சொந்தக் குமாரமுருகா
துன்பந்தவிர்த்தருள் செய் தென்பரங் கிரியில்வளர் சுப்ரமண்யக் கடவுளே.

பாலைநடுக் கானலிற் பட்டபுழு போலயான் பதைபதைக் கின்றேனையா
பாரமா மேகமென வந்தருள்மழை சிந்தி பாவந்தவிர்த் தாளுவீர்
வேலையுன் பதாம்புயம் போற்றலே யன்றியும் வீண்வேலையும் எதற்கோ
வேண்டிய படிக்கெலாம் இன்பங்கொ டுக்க வலமெய்யான வடிவேலவா
சேலைகளவாண்ட திருமால் மருகனே ஞான சீலனேயனு கூலனே
தீரப்பிரபல்ய சிங்கார பிரதாபனே சேவற்பதாகை யோனே
சோலைநடுகல்லாலி னீழலமர் வேதனின் சொந்தக் குமார முருகா
துன்பந் தவிர்த்தருள் செய் தென்பரங் குன்றில்வளர் சுப்ரமண்யக்கடவுளே.

(பாவி நெஞ்சே யேதுக்கிந்த என்ற சந்தம்.)

பல்லவி.

சூரர்காலா போதும் இன்னம் சோதனையேன் செய்கிறாய் (சூ)

அநுபல்லவி.

தீரனே வுன திரு சேவடியைத் துதி
செய்தேன் அநுதினம் சிந்தையிலே கதி
பார்மயில் வாகனு பரங்கிரிப் பதி
பாலாமயில் வேலாயெனை யாளாயினி சற்குரு நீ (சூ)

சரணங்கள்.

நீருந் தீயும் பவன னடத்திடும்
நேரும் பிரிதீவும் வானத்தடங்கிடுந்
தோறும் உன்பாதம் துதிக்க நிலைத்திடும்
சூதற்றுனையே நம்பினேன்
காதற்றுணைபுரி குருநீ (சூ)

தேவர் சூரர் உபாதை பொறுத்திடா
தேவந் துரைசெயக் கைவேலுடன் தடா
தாவலாய் மேவி யழித்தவா நான் கெடா
தாதற் குனை யேநம்பினேன்
காதற்றுணை புரிகுரு நீ (சூரர்)

சேயனைத் தந்தை சிறிதும் அணைக்காது
திரேக சம்பந்தநோய் பீடை தவிர்க்காது
நீயுன் மட்டுக்கு மிருப்பது கூடாது
நீதா வுனையே நம்பினேன்
ஏதா கிலு மருள் குரு நீ (சூரர்)

ஆறுமுகனே பன் னிரண்டு கையனே
ஆடுமயில் மீதி லேறிவா துய்யனே
மேருமலைக்கு மரி பெற்ற மெய்யனே
வேதா வடி வேல்சாமியி
ஞதா வுனையே நம்பினேன். (சூரர்)

---

(தேக்குங்கிமேரா என்ற சந்தம்.)

இராகம் இந்துஸ்தான் தோடி—ஆதிதாளம்

பல்லவி.

சோதனை செய லேனோ நான் சரணம்
சோதனை செய லேதையாகுரு (சோ)

அநுபல்லவி.

பாதத்தை யடுத்தோர் பலவினை கெடுத்தாள்
பரம குருவேயுமை பாலவேதா திருப்
பறவை மயில் வாகன (சோ)

ஞாலமே புகழ நல்வினை திகழ
நம்பின பேர்க்கருள் ஞான தூயானருள்
நமசிவய போதகா (சோத)

இன்னந் தாமதமேன் இறைவநின்னடியேன்
என்றுன் பதமேதொழ எண்ணினேனேயருள்
இந்திர சம்போக லோலா. (சோ)

மைந்தனும் வடிவேல் மகிழுறக்கவி சொல்
மாலைபொற் புயமணி மால்மருகோய் குகா
மந்திர பஞ்சாட் சரனே. (சோ)

(வந்தாள் சண்முகனே என்ற சந்தம்.)

இராகம் இந்துஸ்தான் பியாகு—தாளம் சாப்பு.

பல்லவி.

தருவாய் நல்வரமே சமயம் சுசீகரனே

அநுபல்லவி.

தருவாய் வரமே நின் தாளை சிந்தையிலே நாதா
உறவே நினைத்தேனுனை உமையருளும் வேலனே (தரு)

சரணங்கள்.

எப்பவும் நானேயுனை யிறைவா யிசைந்த பொருளே
அப்பா பணிந்தேனன்று ஆறுமுகனே யின்று (தரு)

முத்தலவானோர்தொழு முதல்வா யினிதினருளே
சித்தமிரங்காய் நன்று தேசிகாகுகா இன்று (தரு)

சத்திக்குமாரா வரந்தரவே பணிந்தேனடியேன்
சத்துரு காலா கந்தா சாமியெனையே வந்தாள் (தரு)

மால் மருகோனே சரவணனே யிறைஞ்சும் வடிவேல்
சொல்லிடு நாதாயெந்தன் துன்பத்தைத் தீராய்கந்தா-(தரு)

---

## இரட்டை ஆசிரிய விருத்தம்.

எந்தெந்த மாதிரிப் பூமியில் ஜெனிக்கினும் ஈசன்மகன் உன்னருளதே யிருக்கி னவர் சுருக்கிலே முத்தியடைவார்களாம் இதற்கு சந்தேகமில்லை.

பந்தாதி பாசமே தொந்த வினையவையெலாம் பற்றறத் தள்ளிஞானப்
பாக்கிய விலாசமுறு யோக்கியதை நான்பெறப் பரமனே யுனையண்டினேன்
வந்தவகை போனவழி தெரியாமலே யின்று வாடுமடி யேன்றுயரெலாம்
மாற்றியருள் செய்குவீர் பிள்ளைதரும் பிழையவை மாதா பொறுப்பதேபோல்
சொந்தநற் பாணனுக் கிந்தனஞ் சுமந்தவன் சொந்தக் குமாரமுருகா
துன்பந் தவிர்த் தருள்செய் தென்பரங்குன்றில்வளர் சுப்ரமண்யக் கடவுளே.

மடவார்கள் நடையிலே பொய்ஜாடை தன்னிலே மஞ்சள் பட்டாடையதிலே
மதுரமொழி தன்னிலே கண்கள் சிமிட்டிலே வாசம்வீசும் பொட்டிலே
குடக்கொங்கை மீதிலே கைவீச்சிலே யவர் கொஞ்சி விளையாடுவதிலே
கொடியிடையிலே மனங் கொண்டலைந்திட்டவர் கோடான கோடிபேர்கள்
படைமாரன் மாய்கையிற் பட்டழிந் தார்களப் பரிசெனக்காகாது காண்
பஞ்சபூதியங்களும் ஒன்றுறவு கூடும் வழி பகரவேண்டுஞ் சற்குரு
தொடைகொன்றை சூடிபிறை சூடிநட மாடுசிவன் சொந்தக் குமாரமுருகா
துன்பந் தவிர்த் தருள்செய் தென்பரங் குன்றில்வளர் சுப்ரமண்யக்கடவுளே.

போன தெல்லாம்போக வினிமேலே யாகிலும் புத்தியுண்டாகி வீணப்
பொய்ப்பயல் களுறவினுல் கெட்டலைந்துச் சமய போதனையுமில்லாமலே
நானரிய பாசமே பெரிதாய்த்திரிந்ததையு நாதனே நீக்கி ஞான
நல்லவர்கள் பாதமே உள்ளத்திலும் சிரசில் நான்சூட வருள்செய்குவீர்
சேனையுடனே சூரன் றன்மே லெதிர்த்துமுன் செல்வழியில் கிரவுஞ்சமாம்
கிகழ்மலையும் பொடிபடக் குருதியாறும் பெருக செவ்வேல் எடுத்த குகனே
சோனைமேகம் பொழியும் கைலைமலை யீசனின் சொந்தக் குமார முருகா.
துன்பந் தவிர்த்தருள்செய் தென்பரங்குன்றில் வளர் சுப்ரமண்யக் கடவுளே.

---

(எனக்குனிருபதம் நினைக்க என்ற சந்தம்.)

தரு. சௌராஷ்டிர ராகம்—திரியுடை தாளம்.

பல்லவி.

நினைக்கு முனதடி வாகந்த நாதா
யனுக்கெதிரில் வருவாய் (நினை)

அநுபல்லவி:

பிணக்குமுன தடி- யனுக்குவரமருள்
எனக்கமுழு மன இனிக்குங் குமரனே
இணக்கிஅன தடி- யகத்தில் தினந்துதி
மிகத்தியரணமா யுறக் கிருபைபெற (நினை)

சரணங்கள்.

திருப்பரங்கிரிப் பொருப்பிலனுதினம்
விருப்புத தோடுறை திருப்பாதங்களின்
சிறப்பை யெடுந்துரைத் திருப்பதொருதொழில்
வரப்பிரசாதமு முறக் கிருபைபெற. (நினை)

அரக்கர் குலமும் வே ரறுக்க வந்தவா
இரக்கு மடியன்மேல் இரக்கம் வல்லையா
சிறக்க சங்கக்கீ ரனுக்கு மிக்கணம்
வரக்கருணை செய்த குறக்குருவே யுனை (நினை)

மலைக்கே மகளென வுதித்த குமரியும்
உளக்களிப்புடனே யளித்தவேலை யெடுத்
தலக்கணுறச் செயு மலைக்கிரவுஞ் சத்தையும்
துளைப்படும் படியாய் விடுத்தவா வுனை (நினை)

படப்பல பொறிக ளிடப் பலமணிகள்
விடப்பிரகாசமுத்து வடப்பணி புரள
நடப்பவனே சூரர் அடற்படை மடிந்து
கெடப்பலத்த வயில் தொடுப்பவா வுனை (நினை)

குறக்குல மகளோர் புறக்கணிச்சிமகள்
வரக்கமல பாத மிரக்குமனமோத
வருக்குஞ் சிவயோகி யருக்கு மூனதடி
யருக்குமருள்செய்ய் பறக்குமயி லேறி (நினை)

தினப்படவுனது மலர்ப்பாதங்களையே
மனப்படமெழுதி நினைக்கும்வடிவேலன்
தனக்குமருள்புரி யுனக்கு முழுமன
திணக்க முடனெந்தன் மனக்கவலை தீர (நி)

ஆதி சரஹணபவ குகனே என்ற சந்தம்.

இராகம்—தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

கோல மயில் மிசை வருபவனே
ஓம் குருபரகுக கந்த (கோ)

அநுபல்லவி.

சிலப்பொறியரவம் காலில் மிதிபடவுந்
தேகங் குலுங்கமிகு வேக நடனமிடும்(கோ)

சரணங்கள்.

திக்குப் புவனவுல கங்களும் போற்றும்
தேசிகா வுன்றனிரு திருவடி யேற்றும்
முக்கிய தொழிலுறு முனிவரும் சாற்றும்
முருகனே யுனதடியனைக் கரை யேற்றும்(கோ)

வஞ்சனை யுறுபல மார்க்கமே மீறி
மாய்கையி னின்றுனது நினைவையு மாறி
நெஞ்சினில் வஞ்சக மாய் களைப்பேறி
நிலைகுலை யாமலுன் னிலையருள் தாரீர்(கோ)

ஏவல்சூனியம் பில்லி யாவையுந் தேக்கும்
இறைவனே குமரனே யென்வினை நீக்கும்
பாவமொழித்து நல்ல பயன் பாதுகாக்கும்
பறவையிலுறு பவ கொடிய வேல்போக்கும்(கோ)

சக்கிரி மால்மரு கனே பெனையாளும்
தாசனுன் பதங்களிற் சரண மென்னுளும்
பொற்கிரி விழயமு மேருவைப் போலும்
புரையறு திருப்பரங் கிரிமலை மேலும்(கோ)

மைந்தன் வடிவேல்சாமி சொல் கவிமாலை
மலரடி சூட்டுமென் மனம் காலைமாலை
எந்தச் சமயமும் இசைப்பதே வேலை
இறைசரஹண பவ குருசரண் ஆளே(கோ)

## ஸ்ரீ பாலவடிவேல் முருகன் திருப்பள்ளி யெழுச்சி.

கோழிகள்—கொக்கரக்கோ—வென்ற—சந்தம்.

கந்தா நின்பாதங்கள் கண்டுதெரிசிக்க காதல்கொண்
டெல்லோரு மாவலொடு
வந்தேயிருக்கின்றார் எந்தாய் வடிவேலா
மாமலர்ப் பள்ளி யெழுந்தருளே

ஞானவானோர் முனி யானபலதேவர்
வாசற்படி தனில் கூடினரே
யேனோயின்னங் கண்ணுறக்கம் ஆறுமுகா
இறைவனே பள்ளி யெழுந்தருளே.

வீரபத்ரர் நவவீரர் தேவர்குழாம்
வெகுநேரமாய் வந்திருக்கின்றாரே
சூரர்குல கால தீரமயில் வாக
னுகந்தா பள்ளி யெழுந்தருளே.

கடம்ப மலர்ந்தது கதிருந் திறந்தது
கங்குலுகன்றது முன்னமேயே
நடம்பயிலீசனி னுசைக் கிசைகுக
நாதனே பள்ளி யெழுந்தருளே.

மதியுமறைந்தது புள்ளின வோசையால்
மான்துள்ளி யோடுது சோலையிலே
யேதசதியுனக்கின்ன முறக்கமோ
என்குரு பள்ளி யெழுந்தருளே.

கிழக்கு வெளுத்துவெகு நேரமாச்சோற்
கேயூர குண்டல சேகரனே
வழக்கு செய்யாதே வுன்சேவை கொடுத்திட
மன்னவா பள்ளி யெழுந்தருளே.

மயில்வந்து தோகை விரித்து நடமாடி
வாசலில் நிற்குதே மன்னவரே
அயில் குமரா கந்தா ஆறுமுகா வள்ளி
யன்பனே பள்ளி யெழுந்தருளே.

மைந்தன் வடிவேலுசாமி சொல் பாட்டிற்குன்
வாக்கருள் தாரு மகிழ்ந்திடவே
உந்தனைக்காண விரும்புவோர் சேவிக்க
வுத்தமா பள்ளி யெழுந்தருளே

---

## இரட்டை ஆசிரிய விருத்தம்.

சத்ய சரஹணபவ கந்தநாதா குகா தற்பரா மௌன வடிவா
சௌவும் உவ்வும் கிலியும் ஐயும் அவ்வும் ஸ்ரீயும் சங்கர குமார வீரா
நித்யகல்யாணமங்கள கீத விங்கிர்த நீலி பாலா சுசீலா
நேசருக்கனுகூல முற்றவா வாறுமுக னேஞான வேலாயுதா
தத்திமித்தோ மென்ன நடனமிடு மயிலேறுஞ் சாமியே பூமிநாதா
சர்வலோகமும் வசி சர்வ ஜீவரைவசி சகலசித்துகளும் வசி
சுற்றிவசி முத்திவசி சித்திவசி யீசுரன் சொந்தக் குமார முருகா
துன்பந்தவிர்த்தருள்செய் தென்பரங்குன்றில் வளர் சுப்ரமண்யக்கடவுளே.

---

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

## ஸ்ரீபாண்டீசுர பகவன் கூடலம் பதி மீனும்பிகா தோத்திரம்.

### கலி வெண்பா.

பூந்தா மரைமேனிப் பொன்னயனு ரும்பணிய
மாந்துளிர்போ லுஞ் சிவந்த மாதுமர்மம்—சேர்ந்திருக்க
வாதிசே டன்சயன மாகயோ கத்துயில் கொள்
மாதிர மெலாமுண்ட மாமாயன்—ஜோதிமயப்
பீதாம் பரத்துப் பெருமாள்பின் பாய்ப்பிறந்த
மாதாம் பிகையீசன் வாமத்தே—வேதாந்த
நாதவொளிபீட நவகோண மானமணை
மீதமர்ந்த போதாந்த வேதகத்தி—யாதியந்த

மில்லாத நாரி விகபரா னந்தசுகம்
எல்லாங் கொடுக்க வலவிறைவி—புல்லாச

னத்துமுனி வோர்தேவர் ஈத்துமலைப் பார்வதித்தாய்
முத்துமணி போலு முகைநகையாள்—வித்தகநற்

பத்தருக்குக் காட்சியிந்தப் பாருலகி லேயளிக்குஞ்
சித்தருளத் தேயமருந் தேவிதிவ்ய—புத்தமுதுண்

டோர்வானோர் போற்றுகின்ற வுத்தமியாள் தேனருந்
தார்குழலாள் ஏகஜக தீஸ்பரியாள்—வீறுசெய்த

தானவனைக் கொன்ற சடாதரிதே வர்கோனும்
வானவனைக் காத்த மகராசி—மானபரி

யேழுருளை யொன்று மிரதத் திரவிமதி
தாழுமடிச் சிற்பரத்தி சத்தியுமை—யேழைமுதல்

செல்வருக்கு மொன்றுய்த் திராசுமுனையாய் நீதி
சொல்லிச் செலுத்துந் துரைசானி—வல்லபுகழ்

ஆயிரத்தெட் டண்ட மனைத்தும் பெறுங்கன்னி
பேயிரதத் தேறுர் பெருமாட்டி—சாயுட்ச

நாலாம் பதத்தி நடுவணைத்தி ஞானத்தி
மேலாம் பரத்தி விமலிசத்தி—நாலாறு

பத்துக் கலைச்சி பரமானந்தத் திறச்சி
முத்திக்கு வித்தா முதல்முளைச்சி—எத்திசைகும்

போற்றும் பரச்சி புகழ்ச்சி மிகவாகச்
சாற்றுகின்ற சிற்பரச்சி தற்பரச்சி—யேற்றுங்

கலைச்சிசிவ காமிச்சி காரணச்சி பொன்போல்
முலைச்சி யினிக்கு மொழிச்சி—சிலைச்சி

நடைச்சி வலைச்சிபல நாமச்சி யீசற்
கிடச்சி கொடிபோ லிடைச்சி—திடச்சிசதுர்

வேதச்சிக் காசி விசாலாட்சி நாதாந்த
போதச்சி மாயாநற் புண்ணியச்சி—நாதச்சி

பஞ்சச் சிரச்சி படையுடைச்சி மெய்யாச்சி
கஞ்சச்சிக் கஞ்சிகுடி காமாட்சி—மிஞ்சுபுகழ்

பிர்மன் சிரங்கொய் பெருங்கரச்சி நீதிச்சி
தர்மச்சி ஜீவ தயாபரச்சி—சொர்னமய

மேனிச்சி யந்தமிலா வெட்டவெளிச்சி மிக
ஞானச்சி பூதலமா நாடகச்சி—மோனச்சி

பேச்சிசிங் கச்சி பெரியயாளிச்சி மறைச்
சூட்சச்சிக் கூன்பிறையுஞ் சூடிச்சி—யாச்சர்ய

பாதிவடி வச்சி பதாம்புயச்சி யோதரிய
மேதினியிலே நடந்த வேடுவச்சி—ஆதிச்சி

மேரு மலேச்சி வெள்ளியம்ப லத்தாச்சி
யாருங்கண் காட்சியாய்க் கண்டவம்பாள்—கூறவொண்ணுத்

தாண்டவச்சி வாடாத தாமரைபோலும் முகச்சி
ஆண்டவச்சி ஞானபக வதி யாச்சி—பூண்டபணி

பூணிச்சி பொற்கொடிச்சி பொய்யில்லாச் செந்தமிழ்சொல்
வாணிச்சி வேத மயேஸ்பரச்சி—சேணிச்சி

யக்குமா லேச்சி யறுத்த கபாலச்சி
திக்கைச் செயித்த திறலுடைச்சி—சொக்கரிடப்

பாண்டிச்சி மாமதுரைப் பட்டாபி ஷேகச்சி
ஆண்டிச்சி பாசி யணிவடச்சி—தூண்டியொளிர்

வேதச் சிலம்பச்சி மெய்ஞ்ஞான ரூபச்சி
ஓதச் சிறந்த வுருவுடைச்சி—காதுலவு

தோடுடைச்சி தீயுந் தொடர்கணிச்சி யாகாச
வீடுடைச்சி துஸ்ட மிருகமாம்—மாடடிக்குஞ்

சூலச்சி வாளிச்சி தோமரச்சி காலனுக்குங்
காலச்சி யாவைக்குங் காரணிச்சி—ஞாலமெலாம்

உண்டோன் தங்கச்சியுல குற்பவச்சி தங்கநிற
வெண்டா மரைச்சி வினயச்சி—எண்டிசையுங்

காணும் விழிச்சி கருணேச்சி மாசக்ரத்
தோனும் பணியு முதாரணிச்சி—வானச்சி

பூத கணச்சி புகழுமிரு பிள்ளைச்சி
நீதில்லா தோங்கிவளர் செஞ்சடைச்சி—யோதுகின்ற

அஞ்சுபடச்சி ரவருசி மூற்குடைச்சி
பஞ்சாட் சரச்சி பராபரச்சி—கொஞ்சுகிளிப்

பேதைச்சி யின்னம் பிள்ளைப் பருவச்சி
ஆதி சேடன் ரெத்ந பரணச்சி—மோதிரச்சி

கன்றுமானிச்சி கரத்து நெருப்புடைச்சி
வென்றியுள ஞானவிபாகரச்சி—துன்றுபுகழ்

கங்கணச்சி ஜோதிக் கடகச்சி யாலிலையிற்
றுங்கனும் போற்றும் துளாம்பரச்சி—எங்கும்

வியாபகச்சி கொன்றைச்சி வேப்பமாலைச்சி
சுயாதரச்சி மோன சொரூபச்சி—பயோதரஞ்செம்

மேருவினைப் போலொக்கும் வெள்ளிமலைச்சிபுகழ்
கூறவொண்ணு தானமீனக் கொடிச்சி—ஆரறுகம்

புல்லுஞ்சூடிச்சி புராதனச்சி மேலிமய
கல்லீயும்நாச்சி கடுகுடிச்சி—வல்லமைசேர்

மாவிடைச்சி யோதிமமா வாகனச்சி யற்புடைச்சி
தாவிடுவ லம்புரியாஞ் சங்குடைச்சி—மேவும்

நிராதரச்சி தத்வ நெறியாகமச்சி
நிராமயச்சி யாம்நிஸ் களச்சி—பராவும்

கருணம்பரச்சி கமலபீர் மன்றூழ்
அருணு சலச்சி யமைச்சி—கறைசேருங்

காள கண்டச்சி கனகக்கை லாசச்சி
கோள கண்ட மெங்கெங்குங் கூடிச்சி—நீலமிகாண்டல்

போலும் நிறச்சி புலிமேலுரிச்சிகரித்
தோலுமுடையிற் றொடுமிடைச்சி—மேலும்

தடாதகைச்சி மும்முலைச்சி தாயே மீனுட்சி
கடாமன்ன ணேடுங்கணச்சி—சடாமகுட

தாரிச்சி லைட்டச்சி கூட்கோணத் துட்கடுக்கைத்
தாரிச்சி செட்டிச்சி தக்கனிச்சி—வீரச்சி

காமணிச்சி காரமுமு கரரிச்சி மாணிக்க
மாமணிச்சி வீசுமொளி மாவளேச்சி—பூமிதனில்

எல்லாரும் போற்றுசிவ வேகாட்சரச்சிகன
செல்லாருங் கூடற்றிகழ் பதிச்சி—நல்லதொரு

பாம்புப் பிடாரச்சி பச்சை யொளிச்சியொரு
மாம்பழந்தும் பிக்கீந்த வல்லவச்சி—கூம்பிலதாஞ்

செங்குவளே வாய்ச்சிபுகழ்த் தேவியகி லாண்டவல்லி
அங்கயற்க ணம்மையே யம்பிகா—சங்கரி

மாதமுக் கண்ணி மகாகௌரி தேவிசத்தி
நீதான தோட்டுஞ் சிவைநாரி—பாதார

விந்தப் பருப்பதத்தி மெல்லியளே ஷண்முகமாம்
கந்தனேயு மீன்றகா மக்கோட்டி—சுந்தரி

நீருய்க் கரித்து நிமிடத் தூலகைபின்னே
வேருக்க வல்ல விமலிசத்தி—கூருகிப்

பங்குகொண்ட மெய்யாம் பராசத்தி மாச்சொக்க
லிங்கரையர்ச் சித்த நிலாநுதலி—பொங்கனலிற்

சூடாய்த்தண் ணீரிற் றுலேயா நெகிழ்ச்சியுமாப்
பீடாருங் கல்லிற் பெருந்திடனும்—வாடாத

காற்றி லசைவாய்க் கூடுகிற் செடியுமாய்ச்
சாற்றவொண் ணுதவித சத்தியுமாய்ப்—போற்றிசெயும்

பிர்மத்து மாய்கையாய்ப் பேராசையாயலதாய்
கர்மத்து மூலமாங் காரணியாய்—தர்மத்

தறம் வளர்த்த வம்பிகையாய் அக்கினி ரூபாய்த்தன்
னிறம் வெளுத்தோனேடாடு நேசி—திறமிகுந்த

வாசிக்கலேக் கூட்டாய் மத்திப் புணர்ச்சியுமாய்
ரேசிக்கக் கூடுந் திரேகத்தி—பூசிக்கும்

பொன்னம் பலத்தி புகழு மது ராபுரத்தி
முன்னந்நா னேர்புரமூன் றங்கொளுத்தித்—தன்னருளால்

விண்ணவரை ரக்ஷித்த வித்தகமா மெய்வரத்தி
பண்ணடைந்த வேதப்பழமறைத்தி—அண்ணனுமுன்

தப்புப் பிசகுரைக்கச் சாபங்கொடுத்தசெல்லி
ஒப்பாரில் லாத வுயர்காளி—செப்பு

மலைநீலி மாமாயி மாகாளி தேவர்
நிலைவாழச் செய்த நிசமான—வலமேனு

மங்கைவிம யப் பொருப்பன் மாதவத்து வந்துதித்த
நங்கையெங்குஞ் செங்கோல் நடுநிறுத்தும்—இங்கிர்த

சிங்காரி ஓங்காரி தெய்வத்திருநாரி
பங்கேருகத்தாச னத்துபரை—மங்காத

ஞானசம் பந்தற்கு நல்லமுது முன்னூட்ட
லானவன் பேமிகுந்த வன்னையின்ன—மானவறு

பத்துநாலாடலையும் பார்த்தபர மேஸ்பரியாள்
மெய்த்தொண்டருக்கு வெளிக்காட்சி—சித்தியளித்

தாதரவுஞ் செய்ய வறுபத்துமூவடியர்
காதலுறு மோட்ச கதியடைய—சீதளமாம்

கண்ணருள் செய்யுந்தாயார் கண்ணப்பர் சாக்கியரும்
பண்ணிசைக்குங் கீதப் பரமேட்டி—யெண்ணுகணக்

காயிரத்தெட்டுத்தலமு மங்கங்கே நின்றருளும்
தாயிபூ லோக மேல்தட்டாக—பாய்பரியும்

நாற்சுருதி யாயந்த நாரணனுங் கைக்கணையாய்
பூச்சொரிய தேவர் புகழ்படிக்க—மாச்சுருதி

வேத னடத்தவெகு விச்சித்ர தேரேறு
மாதி காரணி தேவி யம்மையார்—ஓதுமுகில்

ஒத்த குழலி உமாமஹேஸ்பரிக்கன்னி
எத்தினமும் ஒன்ருய் இருப்பவளிச்—சத்தகடல்

நீருந்திரண்டு நிறையக்கவியுங் கால்
பாருஞ் சுருண்டவோர் பம்பரமா—யாருஞ்

சபயத் ததற்கதற்குட் டானிருந்தே யோங்கும்
இமயவல்லி யேகாம் பரத்தி—வமையுமெழு

நாநீட்டி யாட்டி நலமறி யை யும் மோட்டும்
வானுட்டுப் பொய் சொல்லா மாவிரதக்—கோனுட்டும்

அக்கினியை மூட்டி யனலாய்ப் பொடிகாட்டச்
செக்கர்நிறந் தானுன சீமாட்டி—முக்கியமாய்

அஸ்டகிரி கந்துகமா யாடப்பிரசண்டக்கால்
எட்டுத் திக்குந்தாவி யேவீசி—முட்டப்பின்

எல்லாந்தானுகி யெழுவகைத் தோற்றத்துள்ளும்
உள்ள வுயிராய் அதற் குடலாய்—தொல்லைவினை

போக்கிச் சுகங்கொடுக்கும் பூச்சக்கரக்குடைசேர்
ஆக்கினு சக்கரமீனும்பிகையாள்—தூக்கியிந்த

னஞ்சுமந்து சாதாரி யானவிசை பாணனுக்காய்
நஞ்சும் அமுதா நலங்காட்டிப்—பிஞ்சுமதி

சூடிபிரா னீக்கத் துரிதமாய்த் தன்றலையில்
னீடுகருணையாய் நிதந்தாழை—சூடுமுமா

தேவிகாஞ்சனக்கன்னி திவ்யக் குமாரத்தி
யாவல் சேர் கோடிமங்க ளாகரத்தி—தாவியதோர்

பஞ்சகிர்த்தியஞ்செய் பகவதிய கோராருத்ரீ
பஞ்சசத்தி யொன்றும் பராசத்தி—விஞ்சையரும்

கின்னராருங் கந்திருவர் கெம்பீர மாநாற்பத்
தெண்ணிரவ ரிருடிகளும்—எண்ணுடைய

முப்பத்து முக்கோடி புத்தேள் மொழிவாழ்த்து
செப்பத் தொடங்கி ஜெயஜெயவென்—றெப்போதும்

பேசடங்கா வாத்தியமும் பேரிகோஸ்டம் முரசும்
வீசடங்கார் வாரணத்தின் மேலடிக்கத்—தூசி

பரிதியையுந் தேக்கப் பலவா பரண
விரியொளியே யங்கு வெளிச்சந்—தரமிருந்த
பட்டாபி ஷேகம் படைத்துப் பூலோகத்தில்
அட்டாளதேச மெலாங் காக்கும்—சிட்டர் தொழும்
மீனும்பி காநிவடி வேல்சாமி யின் மாதா
ஞானும்பி காவடிய னுன்னை—யேனம்பி
வீண்போக லாமோ விரைவிற் குறை நீக்கி
மாண்பாக பாக்கியமுமாநிதியும்—காண்பரிய
கல்விக் களஞ்சியமுங் காசினிவாழ் விற்குமுதல்
செல்வப் பொருளும் தினம்கொடுப்பாய்—சொல்ல
வெதிராரில் லாத புகழீஸ்பரியே தாயே
மதுரை மீனுட்சியம்மா.

இராகம் தேசிகதோடி—ஆதிதாளம்.

இம்மாடிமேலிருந்து வந்தமானே என்ற சந்தம்.

பல்லவி.

வாமனேகர மதுர மானே தேனே—ஏழை
வாழவை மீனுட்சியே யென்தாய் நீதானே—அம்மா (வாம)

அநுபல்லவி.

மாமதுரை நாடாளுமம்மா விராணி—இந்தப்
பாமரனையே யருகில் மேவி ஞானி—பாண்டி
மாமலையத் துவசன்மகளான வேணி—யருள்
வாய்மனங் கோணுமலே செய்வாய் நீ வாணி. (அம்மா)

தடாதகைத்தாய் ரூபகமாக வந்துவந்து—ஒன்று
விடாதிசை திசைகளெட்டெதிர்ந்து முந்து—மேதி
கடாவினில் வந்தோன் முதுகு தந்து தந்து—பிந்த
விடாதரமீனுட்சி நீ கசிந்துகந்து. (அம்மா)

விந்தையாயீசுரன்மேல் வெகுண்டுநின்று—கூட
வந்தஸ்தனம் ஒன்றொளியக் கண்டுகெண்டு—மெத்த

சுந்த்ர மணமேபுரிந்தாய் அன்று அன்று—துதி
யெந்தனை யாளாயம்மணி இன்று இன்று. (அம்மா)

உக்ர குமாரனைமீன்ற தாயேதாயே—எந்தன்
வக்கிரகாலம் போகச் செய்வாயே நீயே—உனைய
டிக்கடி வடிவேல்சாமி சேயேன் சேயேன் போற்ற
இக்கணந் தன்னிலருளுவாயே நீயே. (அம்மா)

---

(ஞானவேலனே பாலன்முகம பாரையா என்ற சந்தம்.)

இராகம் தேசிகதோடி—ஆதிதாளம்.

பல்லவி.

கிருபாகரா பாரும் சோமசேகரா (கிரு)

அநுபல்லவி.

திருப்பங்கய செங்க ணங்கயல் விழி
நங்கையும் பணி துங்கமெய்க்கிரு (பாக)

சரணம்.

வேகக்கரிபரியன் வெம்புஞ் சோழனுக்காய் நின்
வேதமே பிர மாதமாமடி போதமேயளி நாதனேகிரு (பாக)

ஆகமிளம் பிறைய ணிந்த திருச்சடைய
ஐயனேகுருமெய்யனே திரு துய்யனேயருள் செய்யவாகிரு (பாக)

சாகாவழியறிந்து தானுய் மோனந்தெரிந்து
தானமுற்றிட லானபற்றற வேணும் சிற்றறி வேனையாள்கிரு (பாக)

செந்நெல்வளரும்பூமி திரிசை வடிவேல்சாமி
சிந்தைவந்தர விந்தபாதமு வந்துதந்திடு விந்தையாய்க்கிரு (பாக)

---

(தேக்கிங்குமேசா என்ற சந்தம்)

இராகம் இந்துஸ்தான் தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தராயிதோ வந்தாளென் சரணம்
சுந்தரா சோம சுந்தரா (சோ)

அநுபல்லவி.

இந்திரன் துதித்த விரும்பதத் தடுத்த
ஏழை தனையாளுவீர் எந்தையே யினி
திந்தணி குலாதிபனே (சுந்த)

மாமனுய் சபையி லே முன் வந்தவனே
மணிவாரி பொதியிடு வாணிகன் என
வந்தவா மதுரை சோம (சுந்த)

யானையை யுரித்த ஞானியே மெய்த்த
அரியநால் மறையோனே ஆன்மேலே வரும்
ஐயனே மெய்யனே சோம (சுந்த)

வானவர் துதிக்க வரும் வினையழிக்க
வல்லசங்கரிபாகா வாரும் வடிவேல்சாமி
வந்துனைக் கூடினேன் சோம (சுந்த)

---

இராகம் இந்துஸ்தான் தோடி—ஆதிதாளம்
(அச்சுாமோரி லாஹூச என்ற மெட்டு.)

பல்லவி.

சுந்த்ர சங்கத் தர்மெய்பாடும் சொக்கலிங்க சுவாமியே
சாமியே யெங்கள் சாமியே (சுந்)

அநுபல்லவி.

அந்தரமுமேயுருவும் சுந்த்ர கோபுரமருவும்
ஆச்சி மீனாட்சியின் ஆலய மெய்ப்போதனே (சுந்)

அன்பாய்த் தடாதகைக்கு மின்பாயருள் கொடுக்கும்
அப்பனே இப்பவே யார்துணை நீர் செப்புவீர் (சுந்)

செந்தமிழ் சிறந்துவள ருஞ்சீர்த் திரிசைநகர்
சீலன் வடிவேலன் உன் கால்பணிந்தேன் ஐயனே (சுந்த்)

---

(பண்ணவர் தொழும் என்ற சந்தம்.)

இராகம் தோடி—ரூபகதாளம்.

பல்லவி.

இன்னமுமனம் இரங்கவில்லையா உனக்
கிது சரியலவடி வேலா. (இன்ன)

அநுபல்லவி.

உன்னடியை யெண்ணுமேழை தன்னைக்
கடைக் கண்ணால் பாரும்
ஷவர ஷண்முக தயாபரா (இன்ன)

சரணம்.

மண்ணெலாமுன் உன்னுமாயன்
வரகிருஸ்ணம ருக்னே நேய
வெண்ணெணுப் படை யசுரர்மாய
எடுபடைக்கொரு வடிவயில் விடு
இறைவனே சர ஹணபவகுக [இன்ன]
நானே யேதுந் தோணுப்பாவி
நம்பினேன் பதாம்புயமேதாவி
நத்தினேன் உத்தம வுன்னையே
இத்தனை கூறியும் என்னையே
நடை மயிலா வடிவேலுன
தடிபணிந்தேன் படைக்குமரனே (இன்ன)

---

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

தெட்சண கைலாசமென யாவராலும் புகழப்பெற்ற
திரிசிராமலை காவிரிநதி வடகரை
சம்புவன மேன்கிற திருவானைக்காவலில் அமர்ந்தருளும்
ஸ்ரீ அகிலாண்டநாயகி யம்மன் துதி.

(சிலையோ சித்திரப் பாவைதானோ என்ற சந்தம்.)

இராகம் தேசிகதோடி—ஆதிதாளம்.

பல்லவி.

வருவாள் எங்கள் மெய்யகி லாம்பாள்
மாதவர் போற்ற (வரு)

அநுபல்லவி.

வாரண முதவிய நீர்மலர் சூட்டி
மரகிழ லதிலிங்க வடிவமுங் காட்டி
சீருடைச் சிவனையர்ச் சனைசெய் சீமாட்டி
திரிசையி லடியவ னினைப்பு மூதாட்டி (வரு]

சரணம்.

திருவானைக் காவிலே பென்தாபார் சீருடைக்கன்னி
உருவாய் புவனம் பெறுமாயா மாயம்பிறகு
மருவாய்த்திருவாய் செயலோயா காரணிமுனம்
விரைவாய் ஏகமாய்ச் சலங்காயா சம்புகளடர்
வெங்கான கங்காண வங்கேவி ளங்குமா தங்கம்
மனமே நாளும்

பொங்கார்வ முங்கூடி கொங்கார் மணக்கோணு—தெங்கும்
மல்லிகை முல்லை

சங்காதி லங்கேரு கங்கையா லங்கேசர்—தங்கும்
படி சொரிந்து

லிங்கேச ரின்காலி னங்கே பணிந்தே—வணங்கும்
சம்பு மாலிங்கர்

தலைமீதி லிலைவீழ பலகாலு முளநாணி—நொந்து
சிரசிற் குமேல்

வலையாட் விழையாடி தழைவீழ விலதாய்சி—லந்தி
மகிழ்ந்து செய்ய

மதமாகரி நிதமேவரு வதுபோவது மிதுவேதென—நாடி
தும்பிக்கையினால்

நதிநீரினை யதின்மேலுற மிதமாய் விடவதுமா வ[illegible]—யோடி
அறுத்தெறியக்

கண்டே சிலந்தியுமுண்டாய் பெருங்கோப—மேறி
யானை தன் கையி

லுண்டான பொந்தின் வெகுண்டோடவுஞ் சால—மீறி
குரல்விடுத்து

சத்தமிட வத்ததிம ரத்தினடி கர்த்தனுமெ
முத்தொழுத மத்தகய-முத்திபெற வைத்துவாயால்—நூலை
தோதாகக் கட்டு

வித்தரிய செத்தைபல தைத்தனது மெய்த்தலைவி
முத்தனையுளத்தொடுவ லைத்திரிப டத்தனதோர்—வேலை
யாகவேசெய்த

காரணததி னானீ சோழ
னூரினுக் கிராஜனாகி
பூரணத் தியானமாக
வாலயத்தி னோடனேக—மாக
விழாநடத்தி

வாரணத்து ளேமுனோது
வாறெனக்கு நீவிடாது
வேறெணத்தை மூடிஞான
காரணத்தில் சேவிவீடு—யோக

வரங்கொடுத்தோம்

எனப்புகன்றிட மாச்சிலந்தியு
மனத்தழுந்துகவனத்துடன் வேறே—ஜன்மம்
இராஜனாகி

இனிப்புறுஞ்சுவை கனிப்படர்வன
மழித்தருஞ்சிவ தனிப்பான்கோசை—தன்யம்
சம்புமாலிங்கர்க்

காலயமும் பணி யாவுமவன்செய
வாசையு ளன்பொடு பேசி யருச்சனை
ய[illegible]லிங்க செய்யவுஞ் செம்பிய னுய்யவும்

வதிமிக மதுரித வரமருள் புரிசிவ
பரையுமை யடிகளை கனவிலு நினையடி
யரையணு குறுதுயர் கதிரெதிர் பனியென
விலகிட மனமகிழ் வொடுபொருள் பெருகியே—வாழ
கிருபைசெய்யும்

அகத்தில் மிகுத்த வரத்தை யளித்தும்
அச்சமெலாமற மெய்ச்சிவ ரூபமுங்—காட்டி
ஆச்சர்யமாக
இகத்தில் பலத்த திறத்த தமிழ்த்தெய்
வத்து கலாமறை நற்றமிழ் நாவினில்—நாட்டி
ஆசி கூறியின்
இத்துய ரனைத்தையுந் தவிர்த்தருளுமே பெருக்க
சத்தியமெய் ஞானவேத சர்ச்சனர் சங்கத்திருக்க
ரெத்தின மூக்குத்தியொளி முத்தலங்களும் ஜொலிக்க
சித்தமும் வடிவேல்சாமி நினைத்ததெல்லாங் கொடுக்க
வருவாள் எங்கள் மெய்யகிலாம்பாள்

## இரட்டை யாசிரிய விருத்தம்.

நான்குகோட்டியானையு மாறுகால்பூச்சியும் நற்கதி யிருக்கவேண்டி
நாவலடிமேவுலிங் கேசரை யருச்சனை நாடோறுமே புரிந்து
வான்கதியடைந்ததாய் புராணமுண்டப்படி வல்வினை கடனையகற்ற
வந்தவடியேன் றயர் தந்தையார்கண்டு சும்மாயிருந்திடலன்னைநீ
யேன்கண்டுகொளாது போலுமே யுற்றனையீஸ்பரி லிங்கேஸ்பரி
யென்மனம்பலவாறு மோகமன மாய்கையிலிருப்பது தடுத்தலென்றே
ஆன்கறவையாருபாய் திரிசிராமலையில் திருவானைகாவல் நகரில்வாழ்
அம்புவியெலாம் புகழ்சம்பு லிங்கேஸ்பரி அகிலாண்ட வல்லியுமையே.

வேதாந்தநாயகி வெள்ளைவிடை யீசர்பால்மேவுகொடி மின்னலொளியே
விமயமலையான் தவத் தேவந்தபார்வதி வித்வகவிவாணர் தாயே
யேதாகிலுங்குற்ற மறியாதுசெய்யினும் எண்ணிடாதே மறந்தும்
இஸ்டமாய்க்கர்மங்கள் கஸ்டங்களோடவே யென்றைக்குமாறுமலே
மாதாபிதாவெலாந் தானுகிநின்னன்பர் மண்டலத்தில் வாழ[illegible]ம
வைத்தடியர் உன்னுமுன் முன்னுகியெதிர்நிற்க மைந்தர்கள் பணிந்துபோற்ற
ஆதாரமாகவந்தாள் சிராமலையில்திரு வானைகாவல் நகரில்வாழ்
அம்புவியெலாம் புகழ்சம்பு லிங்கேஸ்பரி அகிலாண்ட வல்லியுமையே.

மங்கையர்கள் கொங்கையே மாமேரதாம் பெரியவைகுந்தமே யுந்தியாம்
மாயோனியேகண்ட காட்சியாமின்பமே வல்லவமுதாஞ் சொல்லதோ

செங்கரும்பின்சாறு தேன்கூடவாம் இதழ் செப்புநற்பவள கனியாம்
சிறுநுதலும் பிறையதாம் கூந்தல்கருமேகமாம் திகழ்வதன மாமலரென
வெங்கெங்குமேசொல்லி பிதற்றுநர்மாண்பெனக் கெதுக்குயார்மூடரவர்போ
யென்னம்மணி ஞானபொன்மணி கண்மணி எழையெனை யாள்வாயினி (ல்
அங்காதவன்வந்து கால்பணிந்தேத்துதிரு வானைகாவல்நகரில்வாழ்
அம்புவியெலாம் புகழ்சம்புலிங்கேஸ்பரி அகிலாண்டவல்லி யுமையே.

## வெண்பா.

நரியும் பரியாம் நமனும் வரானும்
அரியும் பணியுமா மாங்கு—கிரிகள்
கரியாம் பசுவாம் கனல்புனலா மேனி
யரையா னரசான தால்

## எங்கேபோனாலும் முன்கூட என்ற மெட்டு,

இராகம்—பியாகு—ஆதி—தாளம்.

### பல்லவி.

வாமதுரா புரி மீனாட்சி அடி
மைக்கருள் செய்யும் நின் காட்சி
வந்தடியேனு மிரந்து பணிந்தனன் (வா)

### அநுபல்லவி.

பூமிபுகழ்சிவ காமிமனோன்மணி
பொன்மணி விண்மணி
கண்மணி யம்மணி (வா)

### சரணம்.

தாமதமேன் இனி தாயும் நீதான்வேணி
சகலபுவனங்களையும் பெறுங்கன்னி
தக்கவரங் கொடுப்பாய்—என்ம
னக்கவலை கெடுப்பாய்—அருள்
சங்கரி பொங்கர வங்கட கங்கைவி
ளங்க துளங்க விலங்க புகழோங்கி
வாமதுராபுரி மீனாட்சி

தாயே யுனதடி யேனையபிராமி
சாமிவடிவேலு சாமிபுகழ் வாமி
சஞ்சலத்தைப் போக்குவாய்—அருள்
மிஞ்சவும் உண்டாக்குவாய்—மலைத்
தக்கனி னெக்யமு றக்கனி மிக்கவ
ரக்கனி அக்கனி முக்கணி தாயே நீ
வாமதுராபுரி மீனாட்சி.

---

சரஸ்வதிதுணை.

## சோமசுந்தரக்கடவுள் மதுரையிலாடிய திருவிளையாடல்

### இரட்டை ஆசிரிய விருத்தம்.

இந்திரன்சூரனைக் கொன்றபழிதீரவும் யானைசாபந் தவிரவும்
எங்குங்கடம்பவன மாகவுற்றது பெரியரெத்னகோபுர பீடமாய்
சுந்த்ரமிகு நாடாகவுந் தடாதகைகனற் றோன்றவுமணம் புரிந்தும்
துகளிலா வெள்ளியம்பலத் தாண்டவம்தொல்லை முனிவோரிருவரும்
வந்துகண்டானந்த மாகவும்பேழைபோல் வயிற்று குண்டோதரற்கு
மனஞ்சலிக்கா தன்னமிட்டன் னக்குழியொடு வையைநதி யேழுகடல்கள்
இந்தபூ மண்டலத்தேவந் திருக்கவும் இயற்றின வனியல்லையோ
என்றுன்ப நீக்கவொண்ணு தோவுனலினி யீசனே ப்ரமேசனே.

மாமன்மலைபத்துவச பாண்டியன்றன்னைநன் மாமிகண்டே மகிழவும்
வந்துக்ரபாண்டியன் பிறக்கவும்வேல்வளை வல்லசெண்டுங் கொடுத்தும்
பூமியிற்பொங்கி வருவாரிதியும் வேலினாற் புனல்சுவறியே வ[illegible]வும்
பொன்னாயிரக்கணன் கிரீடம் கீழ்சிந்தவும் பொன்மலையும் பொருளீயவும்
தாமரியரூபமாய் வேதத்தருத்தமும் தான்செப்பியும் கங்கைசேர்
தலையில்மாணிக்கஞ் சுமந்ததுமுன்பேர் ஜலக்கடலை வற்றவைத்தும்
நாமம்வேறாய் நாடுநான் மாடக்கூடலாய் நாட்டினவ னியல்லையோ
நாதனேகீதமறை போதனே வேதாந்த ஞானாகரக் கடவுளே.

யாவைக்கும் வல்லவோர் சித்தனாய்வந்துகல் லானைகன்ன லுண்ணவும்
யாகசமணர்விட்ட யானையுயிர்போகவும் யௌவன விருத்தபாலர்
மூவருந்தானாகி நின்றதுஞ்சேகரன் முன்காண மாறிநடனம்
மொய்ம்பாகவே புரிந்திட்டதும் பிராமணன் மொய்குழ லிழந்துவந்து
காவலர்க்கபயமா மென்னவசர் ரீயாய் உண்மைகாட்டிக்கொடுத்தும்
கழறவொண்ணாதமா பாதகந்தீர்த்ததும் கத்திசண்டை செய்ததும்
தேவர்க்குமெய்யஞ்சு நாகம்பசுஞ்சாக செய்த சித்தனியலையோ
சிறுவனடைதுயருனால் நீக்கமுடியதாதோ சிறுகிலாச் சடைப்பரமனே.

குலபூடணன்காண சேனையொடுவந்ததும் கொஞ்சமு மூலவாக்கிழி
சோட்டையொன் றடியர்க்களித்ததும் கந்ணைக்கொண்டு விற்றுத்திரிந்தும்
வலயோகியாகிமெய் யட்டமாசித்தியும் வாய்திறந்தருள் செய்ததும்
மாறன்முத்திரைதள்ளி தன்விடைபதித்ததும் மற்றவன்றானைகட்கு
நலமீறவே ஜலம்வார்த்ததும் ஆச்சர்ய ரசவாதமுஞ் செய்ததும்
ராஜனச்சோழனை நீர்மகித்தள்ளியும் நடுச்சபையில் மாமனாகி
குலமாதிவம்சமுங் கூறியேவந்துவர குணபாண்டியற் காகவே
குற்றமில்லாத சிவலோகமுங் காட்டியாட் கொண்டமெய்ஞ்ஞான குருவே

பாணனுக்காளாகி விறகுஞ்சுமந்துநற் பாட்டெழுதி யோலைதந்தும்
பலகையிட்டுங்கீதவாது வென்றும்குட்டி பன்றிக்கு மூலைகொடுத்தும்
காணவேயுலவைகளை யமைச்சாக்கிவைத்துங் கரிக்குருவிக் குபதேசமும்
காட்டிநாரைக்கால் மோட்சங்கொடுத்தளவு கட்செவியினா லுணர்த்தி
தோணவேதிருவால வாயாக்கியும்மூனே சுந்தரக்கணை யெய்ததும்
தங்கசங்கப்பலகை யீந்ததும்தருமிக்கு சுவர்ணபொற்கிழியளித்தும் .
நானுமக்கீரனைக் கரையேற்றி வைத்தவோர் நாதனும் நீயல்லையோ
நான்படுந்துயருனை நீக்கமுடியாததோ ஞானாகரக் கடவுளே.

கீரனுக்கிலக்கணஞ் சொல்லியுஞ் சங்கத்துகிளரும் கலகந்தவிர்த்தும்
கெம்பீரகவிராஜனுமிடைக் காடன்சொல் கேட்டுபின்னே தொடர்ந்தும்
நீரிலேவலைவீசியும் வாதவூரர்க்கு நிலைஞான மோதிவைத்தும்
நீள்கானகத்து நரி குதிரையாய்வந்துபின் நீண்டகுரல் சம்புகமுமாய்

ஊரிலேயோடவும் மண்சுமந்திட்டதும் உத்தமப் பாண்டியற்கும்
உண்டானதாஞ் சுரந்தீர்த்தந்த சமணரை வுயிர்வாங்கியும் வன்னியும்
சீலிங்கங்கிணறுகாட்டி யறுபத்துநா லாடல்செய் சித்தனீயே
சிறுவன்படுதுயருனால் நீக்கமுடியாததோ சிறுகிலாச்சடைப் பரமனே.

---

இந்தஆசிரிய விருத்தங்கள் ஆறனுள்ளும் சோசுமந்தாக்
கடவுள் விளையாடிய அறுபத்து நாலாடலுங் காண்க.

விபரம்.

| | |
|---|---|
| முதல் கவியில் | ஒன்பது |
| இரண்டாங் கவியில் | பத்து |
| மூன்றாங்கவியில் | பத்து |
| நான்காங் கவியில் | பதினொன்று |
| ஐந்தாங் கவியில் | பதின்மூன்று |
| ஆறாங் கவியில் | பதினொன்று |

ஆக மொத்தம் அறுபத்திநான்கு.

---

திருநல்லூர்க் கார்த்திகைத் தீபம் என்ற சந்தம்.
இராகம்—தோடி—ஆதி—தாளம்.

பல்லவி.

மதுரைக்கோபுரச் சிங்காரம் இந்த
மண்டலத்து முண்டபாரம் கண்டுசொல்ல[illegible] விஸ்தாரம்
மதுரைக்கோபுரச் சிங்காரம்.

அநுபல்லவி.

அதலத்தோ அஸ்திவாரம்
விதலத்திலே உயரம்
அதற்கு மேலே சிகரம்

இருப்பது சுயத்தாம்பிரம்
அத்தகை வித்தக சித்திர வீதி
வைத்தது சுற்றியு மெத்தப் பிரக்யாதி
அல்லாமலும் இந்திரன் கல்லானை எட்டுவைத்து
அங்குமிங்குமெங்கும் சுய
தங்கமயமாய் ஜோடித்த
மதுரைக் கோபுரச் சிங்காரம்.

சரணம்.

வீரபத்ரக் கடவுள்
கோரமாகாளி யின்னம்
வேலவன் யானைமுக
வேலவன் யானைமுக
மூலகணேசன் அன்னம்
ஏறுபிர்மாவுமாயன்
இவரெலா நிற்க முன்னம்
இந்திரன் போற்றிசெய
எழுந்தருள் தந்து சொன்ன
இறைவனு மமாதிரு
பொன்னனையும்
தரையில் புரளவென்றுறுபவனொரு
இச்சைச் சதுர்ப்புஜ நிரப்பியே யந்திவேனை
மெச்சத் தூணிடையினி லச்சப்படவுதித்த
நாரசிங்க ரூபதிவ்ய சூரனுட னாக
மாறுகொண்டவீரறுசெயல் கூறவெளியாக
நஞ்சு மமுதாக வுண்ட
பிஞ்சுமதிக் காளகண்ட
செஞ்சடை தனிற் பிரமாண்ட
மிஞ்சுபுனனையுங் கொண்ட
நாதன் பரனோடு பிர
மாதன் பணிகூடு யிலே
மாது முன்னேயாடு சிலே
யாவருங் கொண்டாடும் படி

நகமு மாதிரமெலாம் ஜெகமும் புகழகரு
முகிலுந் தடவவொளி தகதகதகவென
சங்கமமருந்திறலும்
எங்கணுமெய்யோங்க
பொங்குமொளிச் சந்திரனும்
அங்கேயே பின்வாங்க
சர்வாதி பூதலமு நிர்வாக மாயறியத்
தர்மானு போகவிஸ்வ கர்மாவு மேமகிழத்

தானே — மணிச்சேடனு
னேனே — சொல்லவுமுடி
யானே — இந்த்ராணிமைகி
லானே — இவ்வண்ணமாக

தக்கவர் மிக்க மனக்களி புக்கிட
தேவாதியோ ரானவர்
சொக்கர் மலர்க்கழ லிற்கண கச்சிர
மோயாது மேதானவர்
கூடவே தினம்
சாமி யெனும்போ தொலி
பூமி யெலா மிரைய
சரணஞ் சரணமெனத்
தருண மறிந்துறைய
தந்திரமந் தாகினிபோல்
வைகை நதியோடே
சுந்தரக் கடம்பவன
முந்திரளூடே
கந்தரம் படிமதுரைக் காரணி மீனாட்சி
வந்தருளவடி வேலுச்சாமி கண்டகாட்சி (மதுரை)

சிாகிரி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாங்கிரிதனில்மேவும் வடிவேலாவுன்
பாதாரவிந்தம் துணையே.

அநுபல்லவி.

காங்குவித்தேனே முரு காவாகுமரகுரு
வரங்கொடுத்திருமிரு மாதுமணாளா-திருப் (பா)

சரணங்கள்.

அர்ஹராதவசுகா ஆதரியாறுமுகா
தருணமிதுவேகுகா சாமிசரஹணபவா. (பா)
முரஹரியின்மருகா மூர்த்தியென்முன்வருவாய்
பாபோகமேதருவாய் பரைகுமாராமுருகா. (பா)
பிரணவப்பொருள்வாகா பேசியமறையோகா
பிரமனும்சிறையாக பரமனுக்குறையூகா. (பா)
மரகதமுடிசூடி மாமயிலோனேபாடி
சரணஞ்சரணம்கோடி சதாசிவன்பாசூடி. (பா)

---

புள்ளிமாமயிலா என்ற சந்தம்.

இராகம் — தேசிக தோடி, ரூபக தாளம்.

பல்லவி.

மாறியாடியவா சம்போ
மாறியாடியவா.

அநுபல்லவி.

மங்கை கங்கை மாமதியுஞ்
செங்கமான் மழுத்தரித்தே. (மாறி)

சரணங்கள்.

பாரில்ராஜசேகர பாண்டியன்வேண்டவும்
பாங்குடன்வெள்ளி யம்பலத்திருத்தாண்டவம்
தாரரவணிந்துன் றுளதைவூன்றியே
சரி கக் கம பத கம கரி
தக திக் தரி கிடத் தோமென. (மா)

மாரன்றனை நெற்றிக் கண்ணு லெரித்தவா
மாயப்பசுவை நந்தியால் வதைத்தவா
கீரனுக்கே முன்னிலக்கண முபதேசித்தவா
கீர்த்திபெறுந் திருவாலவாய்
க்ஷேத்திரத்தினுள் மேலவா. (மா)
விறகொடு மாணிக்கம் விற்றுத் திரிந்தவா
விருத்தகுமாரபால னாய்ப்பிறந்தவா
கருதுஞ் சதாசிவன் கவிக்குகந்தவா
கரிக்குருவிக் குபதேசித்தாய்
நரியைப்பரி யாக்கியவா. (மா)

---

சேந்தூர்க்கந்தா என்ற சந்தம்.

பயிரவ ராகம், ரூபகதாளம்.

பல்லவி.

சுந்தரேசா வந்தென் துயர் தீரய்யா—நீயே
துணையன்றியினி யெனக் காரய்யா.

அநுபல்லவி.

அந்தரர்கள்மகிழ்க் தடிதொழும்புகழ்
அடியவர்க்குட னடமிடுமல ரடிகொடுத்திட
மதுரையில் உறும் (சுந்)

சரணங்கள்.

சுரநதியுறமதிசிரமதில் இலங்கிடு மரகதவொளிவிடு
மரவெனும் பணியொடு விரிசடை
திரளுமுப்புரி புயஉருத்திரா
கரமதில்நவ மழுவொடுமத
கரிபுலியுரித் துடல்தரித்திட
பரகதிதரத்தி பசுபதிபரமனின்
வரமதை யளித்திட
பத்திநெறி நத்தினேன் கத்தினில்நல்
முத்திபெறக் காத்தனே துதித்திடவும் (சுந்)

வாநதிபெருகியே வைகையில்
　　பரவிபு மிருகடை மோதிட
விரைவினிலதையறிந் தரசனு
　　பறையறைந் தணையிட வோதிட
அரஹராசிவசிவாவென வாணுவச்சி
　　நரைமயிர்உடல்தளர்ந் தாடிட
தருணம்பீபுரிமணி யணிந்துமோர்
　　தட்டுமண் வெட்டியுங் கூடிட
　　தட்டினுதிர்ந்திட்ட பிட்டுக்காகவடி
　　பட்டுமறைந்திட்டாய் சிவசிவாஓடி (சுந்)
அரியயனறிந்திடா தடிமுடி
　　அமைத்திட்டாயமலா நாரைக்குமுத்த
கரிக்குருவிக்குபதேசித்தவா மார்க்
　　கண்டனுக்கென்றும் பதினறுகச்சித்தி
பெறுகவிசைத்தா யறுமுகனிடம்
　　பிரணவஞ் சொன்னய் சிறுதொண்டன் பத்தி
விருந்தமுதருந்தினய்ச் சமணரை
　　வீரகழுவேறவைத்தாயகம் நத்தி
விறகெரடுவேளையல் மாணிக்கந்தூக்கி
　　விற்றுவந்தாய்வீதி வீதியாகச்சுற்றி
வித்தகாவின்சித்தமிரங்கித் தருணம்
　　பத்தனுமசதா சிவன்தமிழ்க் கருள்வா. (சுந்)

---

பொன்னுலவும் பன்னிருகை வேலா என்ற சந்தம்.
இராகம்-இந்துஸ்தான் தியாக், ஆதி-தாளம்.

கண்ணிகள்

சீர்மிகுஞ்செந்தூர்வளர் சிங்கார　　　　வள்ளி
தெய்வயானையைமருவுந் தீரா　　　　உந்தன்
சித்தமிரங்கித்தருணம் வாராய்　　　　இந்த
　　ஜெகமதில் பசுமதி பரமனு

ரகமகிழ்வுறப் பிரணவமுறை
செங்கைவடிவேலணிந்தாய் சீராய் ஞான
தேசிகனே சின்மய வொய்யாரா
சூரனைச்சம்ஹாரம்செயதாய்வீரா சிவ
சுப்ரமண்யாநற்பழனிக் குமாரா அன்று
செப்புமுனிக்குப்பொருளேரோய் சதா
சிவனுக்கருள் திருவாலவாய்
பவனித்தவன் அருள்வேலவா
சென்னியாறு பன்னிருகை வீரா திருச்
சேவடிசேர் பாவலர்க்கு தாரா
தாரணிந்துமார்நிறை தயாளா சம்ப்ர
தாயமோகின்செய னெடுநாளாய் து தி
சாற்றுமனம்போற்றுமுறை கேளாய் கந்தா
சரஹணபவகுகா பிரமனை
சிறையதிலுறச் செய்தாய் முருகனே
ஜாலஞ்செய்வதாலே யகந்தாளா தா தி
சத்தியருள்புத்திரா வந்தாளாய்.

---

மேரேபகியாம் பஜாயுரே என்ற சந்தம்.

பல்லவி.

திருக் கழுகாசலக் குமரா காவாததியே.

அநுபல்லவி.

புழுகாபி ஷேகனே
புகழ்மறை யூகனே
புண்யா நின கதிமே
மண்யா வென் து தியே. பாலசுப்ர (திரு)

சரணங்கள்.

தொழுதேன் நாளும் விசாகா
தோகை மயூர வாகா
ஞாவிமழுவாளி யருள்வே
காவாததியே. (திரு)

சுத்தனே சித்தனே நத்தினேன்
மெய்த்திருக் (கழு)

குழகனே நின்சீர்த்தாளைக்
கோரினேனே வந்தாளக்
கழறுஞ் சதாசிவன்சொல் காவாததியே
குற்றமே தற்ருது மற்றிட
சற்றேயவ் வெற்றிவேல் பற்றியென்
கொற்றவா நித்தமும் காவாததியே. (திரு)

---

ராமபஜனே கோரியா என்ற சந்தத்தில்

பின்மகுடம்.

பல்லவி.

யார் அறிகுவா ரையனே உன்மகிமையை
யாரறிகுவாரையனே.

அநுபல்லவி.

ஓராறுமுகவனே உலகோர்புகழ்பவனே
யீராறுகரத்தவனே உன்மகிமையை. (யா)

ஊசிமாமுனிக்குப தேசியானவாசிகி
வாசியேறுமெய்ஞ்ஞான தேசிகாகுருபரா. (யார்)

சரணங்கள்.

வீரசூராசம்ஹாரா வேல்பிடித்தகெம்பீரா
தாரணிக்திடும்சிங்காரா உனமகிமையை (யார்)

வேதமறையோதியா வேதன்சிறையிலுற
வேதருணமிசைத்த வேதனேபரன்சுதா (யார்)

வாரமொருநாள்சோம வாரங்கொண்டநாமம்
பாரதில்புகழ்பூமா உன்மகிமையை(யார்)

வாமியாகியசிவ காமியருளுங்கந்த
சாமிசதாசிவன்பாதா முன்கழலிலணி. (யார்)

## மங்களம்.

மஞ்சுநிகர் குந்தள மின்னே என்ற சந்தம்.

இந்துஸ்தான் பியாக், சாப்புதாளம்.

மங்களும் விஜயமங்களம்—வேழமுகற்கு-மாதிபரற்கு
மங்களம் விஜயமங்களம்—சுப
மங்களம்ஜெய மங்களம்ஜெய
மங்களம்ஜெய மங்களம்ஜெய
மங்களம் விஜயமங்களம்—மாதுபரைக்கும்-கோதில்குகற்கும்
மங்களம் விஜயமங்களம்.
பங்கயமலர்த்திருவிற்கும்—நாராயணர்க்கும்-மரையயற்கும்
பாடிடும் புலவர்களுக்கும்—இந்தப்
பாலனும்வடி வேலுசாமிசொல்
நாலு மாமறை சீலமாவன
பாரதிதனக்கு மங்களம்—யாவரும்புகழ்-இராஜராஜருக்கும்
தாரணியோருக்கும் மங்களம் (மங்களம்

## வாழ்த்துக் கவி.

சொக்கலிங் கேசர்வாழி துகில்மீ னாட்சிவாழி
நக்கனைப் புகழ்ந்துபேசும் நாலுமா மறைகள்வாழி
எக்கிய முனிவர்வாழி எல்லாவா னவரும்வாழி
முக்கிய செங்கோல்வாழி மும்மையும் வாழிவாழி.

கீர்த்தன இரத்தினகாரம்
முற்றுப்பெற்றது.

# நூன்முகம்.

பலநூலாய்ந்த பெரியீர்!

நவகண்டங்களாகப் பகுக்கப்பட்டதில் எங்கணும் புகழப் பெற்ற இப்பரதகண்டநதில் தென்றமிழ் சிறந்து விளங்கிய இம் மதுராபுரியானது தீர்த்தமகிமை, மூர்த்திமகிமை, ஸ்தலமகிமை என்னும் மூன்றுனுஞ் சிறந்ததாகையாலும் நினைக்க முத்திதரவல்ல தென்பதாகையாலும். பக்திக் கொருவழி பாடித்துதித்தல் என்ற தாலும், சிறுவன் ஒருவாறு சிற்சில கீர்த்தனைகளியற்றினன்.

"என்னை நீ வருந்திக் கவிபாடினுலும் எடுத்த கற்பனை முன் னோர் சொன்னதேயலால் நூதன மொன்றிலை" யென்ற நீதிநூல் வாக்கியப்படி எப்படிப் பாடினும் முன்னோர் செப்பியதேயாம். யாம் புதிதாய்க் கண்டுபிடிப்பதில்லையென்றும், பக்திமார்க்கத்தின் கண் யாவரும் குற்றம்பாரார் என்பதுகருதியும் வெளியிடத்துணிந் தேன். பிழைபொறுத்தல் பெரியோர்கடன்.

## அவையடக்கம்.

தெண்ணீரில் நுரையுண்டு சுவையின்மிக்க
செங்கரும்பிற் சக்கையுண்டு சிறந்துமேவும்
மண்ணிலுமே யுவர்ப்புண்டு கடற்குப்புண்டு
மதிக்குமொரு சிறுகளங்கம் வீந்ததுண்டு
பண்ணரியோர் புகழ்மேவார் பொருளையன்றி
பலவாறு கசடெண்ணிப் பாரார்பாரார்
எண்ணுகிலார் என்பதுன்னி சிரியேன்கற்ற
தியம்பலுற்றேன் புலவர்களி கொள்வர்மன்னே.